Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 18, 2021

புதன்கிழமை ஒகஸ்ட் 18, 2021 | ஒளி: 07 கதிர்: 77 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# வௌவால்கள், ஆந்தைகளுக்கே ஊரடங்கு பிறப்பிப்பு

தற்போது நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவானது, வௌவால்களுக்கும் ஆந்தைகளுக்கும் விதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த முருதொட்டுவாவே ஆனந்த தேரர், இரவு 10 மணி தொடக்கம் அதிகாலை 4 மணிவரையான காலப்பகுதியில் குறித்த பறவைகள் மாத்திரமே நடமாடும் என்றார்.

அபயராம விகாரையில் நேற்று (17) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




# ஆட்சி நீடித்தால் ஆப்கான் நிலைமையே ஏற்படும்

■ பா.நிரோஸ்

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சி தொடருமாக இருந்தால், ஆப்கானிஸ்தான் - காபூல் நகரில் மக்கள் விமானத்தில் ஏறி வெளிநாடுகளுக்குத் தப்பியோடுவதைப் போன்ற நிலைமை இலங்கையிலும் ஏற்படும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (17) விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், "அமைச்சரவை மாற்றத்தைப் பார்க்கும்போது, சீட்டுக்கட்டு விளையாட்டே நினைவுக்கு வருகிறது" என்றார்.

தொடர்ச்சி P2



# ரூ. 61.5 பில்லியன் கடன் வழங்குகிறது சீனா

இலங்கை மற்றும் சீன அபிவிருத்தி வங்கி ஆகியவை 2 பில்லியன் யுவான் (ஏறத்தாழ 61.5 பில்லியன் ரூபாய்) கடன் ஒப்பந்தத்தில் நேற்று (17) கைச்சாத்திட்டுள்ளன.

கொரோனா நிலைமை, பொருளாதார மறுமலர்ச்சி, நிதி நிலைத்தன்மை, வாழ்வாதார மேம்பாடு ஆகியவற்றுக்காகவே கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.



கொரோனாவை கட்டுப்படுத்தல், பொருளாதாரத்தை மேம்படுத்தல்...

# 21 யோசனைகள் முன்வைப்பு

## கோட்டாபய-ரணில் பேச்சிலும் எடுத்துரைப்பு

**விடுகளில் இருந்தே பணியாற்றும் முறைமைக்கு தொடர்ந்தும் அனுமதியளித்தல்**

**கொரோனா செயலணியை கலைத்துவிட்டு அனர்த்த முகாமைத்துவ சபையை ஸ்தாபித்தல்**

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவது, தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு அவசரமாக சிகிச்சையளித்தல், ஒட்சிசன் வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சி, 21 யோசனைகளை அரசாங்கத்துக்கு முன்வைத்துள்ளது.

சுகாதார மற்றும் பொருளாதாரத்தை பாதுகாக்கும் வகையிலேயே இந்த யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில், நேற்றைய தினம் இடம்பெற்ற 45 நிமிட சந்திப்பின் போதும், இந்த 21 யோசனைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விருக்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலுக்குப் பின்னரே, ஜனாதிபதி மாளிகையில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

# செலவின்றி கட்டுப்படுத்தலாம்

■ பா.நிரோஸ்




கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த கிராம மட்டங்களில் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்த ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, தடுப்பூசிகள் மாத்திரம் கொரோனாவுக்கு தீர்வல்ல எனவும் தெரிவித்தார்.

கொவிட்-19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான பாராளுமன்ற விவாதத்தில் நேற்று (17) கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசிகள் மாத்திரம் ஒரே தீர்வல்ல. ஒரு தடுப்பூசியை மாத்திரம் செலுத்துவதும் போதாது. இரு டோஸ்களையும் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தடுப்பூசி செலுத்தியதன் பின்னர் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி ஏற்பட இரு வாரங்கள் செல்லும் எனவும், அரசியல் கட்சிகளின் குழு

தொடர்ச்சி P2



# மலையகத்தில் பல நகரங்கள் முடங்கின

■ ஆ.ரமேஸ், என்.ஆராச்சி, சுமணசிறி குணதிலக, ஏ.ஏ.எம்.பாயிஸ், எம். செல்வராஜா, மஹேஸ் கீர்த்திரத்ன

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, மலையகத்தில் பல நகரங்களின் வர்த்தக நிலையங்களைத் தற்காலிகமாக மூடுவதற்கு அந்தந்த நகரங்களின் வர்த்தக சங்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

இதற்கமைய, வலப்பனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வலப்பனை நகரம், பதியப்பெல ஆகிய நகரங்களை மறுஅறிவித்தல் மூடுமாறு, இவ்விரண்டு நகரங்களின் வர்த்தக சங்கத்தினர் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



பாராளுமன்றத்தில்

# 12 பேருக்கு கொரோனா

பாராளுமன்ற பணியாட்தொகுதியினர் 12 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று (17) நடத்தப்பட்ட கொரோனா பரிசோதனைகளின் போதே அவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டதாகத் தெரிவித்தார்.

கொரோனா நிர்வாகத்தில் இலங்கை சிறப்பாக செயற்படுவதாகச் சிலர் பெருமை பேசினாலும், இந்த நாட்டில் கொரோனா நிர்வாகம் தோல்வியடைந்து நீண்ட காலமாகிவிட்டது என்றும், தற்போதைய அரசாங்கத்துக்கு நாட்டை கட்டியெழுப்பும் தொலைநோக்கு பார்வை இல்லை என்றார்.

# அதிகாலை கத்திக்குத்தில் குடும்பஸ்தர் பலி

■ எம்.றொசாந்த்

வல்வெட்டித்துறையில் நேற்று (17) அதிகாலை 12.30க்கு இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில், அப்பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் கிருசாந்தன் (வயது 30) கொல்லப்பட்டுள்ளார்.

குடும்பத்தகராறு காரணமாக இந்தக் கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

சம்பவத்தில் படுகாயமடைந்தவரை உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று அனுமதித்த போதும், அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# முதியோர் இல்லத்தில் 46 பேருக்கு தொற்று

## நால்வரில் மூவர் உள்ளேயே மரணம்

■ சேஹ்ன் செனவிரத்ன

கண்டி, மஹியாவ பிரதேசத்திலுள்ள முதியோர் இல்லமொன்றில் தங்கியுள்ள 60 பேரில், 46 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களின் நால்வர் மரணமடைந்துள்ளனர்.


இவ்வாறு மரணமடைந்த நால்வருள் மூவர், குறித்த முதியோர் இல்லத்துக்குள்ளேயே மரணமடைந்துள்ளனர் என்றும் மற்றையவர், கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், உயிரிழந்துள்ளார் என கண்டி பிரதேச சுகாதார வைத்திய பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த முதியோர் இல்லத்தில் 60 பேர் தங்கியிருக்கின்றனர். இல்லத்தின் 6 அலுவலக உறுப்பினர்கள் உள்ளிட்ட 46 பேருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த முதியோர் இல்லத்தில் உள்ள அனைவருக்கும் கொரோனா தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது என கண்டி பிரதேச சுகாதார வைத்தியப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றியிருந்த

# சீனப் பெண் இங்கு மரணம்



கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிம்புலபிட்டிய வீதி, ஆடி அம்பலம் எனும் விலாசத்தை வசிப்பிடமாகக்க கொண்ட சீனப் பெண் (வயது 38) கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில் மரணமடைந்துள்ளார்.

நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அப்பெண் மரணமடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

# டெல்டாவின் 3 புதிய பிறழ்வுகள் கண்டுபிடிப்பு

■ பா.நிரோஸ்

நாட்டில் பரவிக்கொண்டிருக்கும் டெல்டாவின் புதிய பிறழ்வுகள் மூன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, விசேட வைத்திய நிபுணர்கள் அவற்றை அடையாளம் கண்டுள்ளனர் என்றார்.

SA 222V, SA 701S மற்றும் SA 1078 S ஆகிய டெல்டா வைரஸின் பிறழ்வுகள் இவ்வாறு கொரோனா திரிபின் S மரபணு குறியீட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (17) நடைபெற்ற கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# யாழ்.எம்.பிக்கு கொரோனா



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தனது டுவிட்டரில் பதிவொன்றை இட்டுள்ள கஜேந்திரகுமார்

தொடர்ச்சி P2

வைத்தியசாலைகள் நிரம்பின

# கதிகலங்கி நிற்கிறது கல்முனை

## நாளொன்றுக்கு 100 தொற்றாளர்கள் அனுமதி; 2 மரணங்கள்

■ வி.ரி.சகாதேவராஜா



"நாட்டில் வேகமாகப் பரவிவரும் கொரோனா வைரஸ் தாக்கத்தால் கல்முனைப் பிராந்திய வைத்தியசாலைகள் தொற்றாளர்களால் நிரம்பிவழிகின்றன" என கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் குண. சுகுணன் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்திய சமகால கொரோனா நிலைவரம் தொடர்பாகவும் தாம் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அவசரத் தேவைகள்

தொடர்ச்சி P2

# 10 வயது சிறுமி துஷ்பிரயோகம்; கொரோனா தொற்றாளர் கைது

10 வயதும் மூன்று மாதங்களேயான சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சந்தேகத்தின் பேரில், 60 வயதான நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் அளுத்கம சீனவத்த பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமியே பாதிக்கப்பட்டுள்ளார். அளுத்கம, கனேகம பிரதேசத்தில், தனது வீட்டில் வைத்தே, சிறுமியை பல தடவைகள் சந்தேகநபர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார் என்பது விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டது.

சம்பவத்தை அடுத்து, பிரதேசத்திலிருந்து தப்பியோடி தலைமறைவாகியிருந்த அந்த நபர், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்.

தொடர்ச்சி P2

LK Newspaper Viber Community

PAGE 1 தொடர்ச்சிகள்

## வௌவால்கள், ஆந்தைகளுக்கே ஊரடங்கு பிறப்பிப்பு

தொடர்ந்து தெரிவித்த அவர், "நாட்டுக்காக குரல் கொடுத்த எமக்கு, புதிய அரசாங்கத்தை சரியாக வழிநடத்த, முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில், இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தவர்களையும் உதவி செய்தவர்களையும், ஆட்சியாளர்கள் மறந்து விட்டனர். ஆனால், எமக்கு உரிமையுள்ளது" என்றார்.

> பிரதமர் மஹிந்தவுக்கு இந்நாட்டில் கிடைத்த கௌரவம் 25 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது

"கொரோனா எச்சரிக்கை குறித்து, வைத்திய நிபுணர்கள் உள்ளிட்டவர்கள் கூறும் ஆலோசனைகளை, துளியளவு கூட கணக்கில் எடுக்காமல் செயற்படுகின்றனர்" என தெரிவித்த அவர்,

"தன்னிடம் உரையாடிய ஒருவர் என்ன நடக்கிறது? எதற்காக இவர்களை அதிகாரத்துக்கு கொண்டு வந்தீர்கள்? நீங்கள் கூறியதற்கமையவே அனைத்தையும் செய்தோம். இப்போதாவது ஏதாவது மாற்றத்தை செய்யுங்கள் எனக் கோருகின்றார்" என்றார்.

எனவே, இந்த அரசாங்கத்தால் மக்களைப் பாதுகாக்க முடியாதெனில், அதற்காக செய்ய வேண்டியதை செய்ய அதிகம் காலம் செல்லாதென, அரசாங்கத்துக்கு நினைவுப்படுத்துவதாகத் தெரிவித்த அவர், தற்போது முடிந்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கிராமத்துடனான சந்திப்புக்குச் செல்லுமாறும் கேட்டுக்கொண்ட அவர், அவருக்கு முன்பு கிடைத்த வரவேற்பு இப்போது குறைந்திருக்கிறது என்றார்.

அதேபோல் பிரதமர் மஹிந்தவுக்கு இந்நாட்டில் கிடைத்த கௌரவம் 25 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது என சுட்டிக்காட்டிய அவர், எனவே மிகுதியுள்ள 75 சதவீத கௌரவமும் குறையும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதால், அந்த 75 சதவீதத்தை சரி பாதுகாக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

## ஆட்சி நீடித்தால் ஆப்கான் நிலைமையே ஏற்படும்

"அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தனது அமைச்சு மாற்றப்பட்டதற்காக ஒப்பாரி வைக்கிறார். அமைச்சு பறிபோவது தனக்குத் தெரியாது என்கிறார். நாட்டை ஆட்சி செய்வதும், தீர்மானங்களை எடுப்பதும் கோமாளிகளே" என்றார்.

"பவித்ரா பலி கொடுக்கும் கதையைக் கூறியிருந்தார். இவர்கள் அனைவரும் இணைந்து நாட்டு மக்களையே பலி கொடுக்கிறார்கள்" என்றார்.

"தமிழர்கள் மட்டுமே தஞ்சம் கோரி இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு ஒரு காலத்தில் சென்றனர். ஆனால், இந்த அரசாங்கம் இப்படிப் போகுமாக இருந்தால் எதிர்காலத்தில் சிங்களம், தமிழ், முஸ்லிம் என அனைவரும் தஞ்சம் கோரி வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லும் நிலைமை ஏற்படும்" என்றார்.

## மலையகத்தில் பல நகரங்கள் மூடங்கின

அதனடிப்படையில் நேற்று (17) காலை முதல் குறித்த நகரங்களின் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளதென, வர்த்தக சங்கத் தலைவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மொனராகலை நகரிலுள்ள சகல வர்த்தக நிலையங்களையும் நாளையிலிருந்து (19) ஒரு வாரத்துக்கு மூட மொனராகலை வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும், தெரணியகலை நகரிலுள்ள வர்த்தக நிலையங்களையும் இன்றிலிருந்து (18) எதிர்வரும் 24ஆம் திகதி வரை மூடுவதற்கு, ஐக்கிய வர்த்தக சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, பலாங்கொடை மற்றும் எம்பிலிப்பிட்டிய நகரங்களும் நேற்று முன்தினத்திலிருந்து (16) மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தொற்றுப் பரவலைக் கருத்திற்கொண்டு, பண்டாரவளை மற்றும் பதுளை நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை ஒரு வாரத்துக்கு மூடுவதற்கு வர்த்தக சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

அத்துடன், மாத்தளையில் பல்லேபொல நகரத்தின் வர்த்தக நிலையங்களை நேற்றிலிருந்து (17) எதிர்வரும் 23ஆம் திகதி மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# 21 யோசனைகள் முன்வைப்பு

- கொரோனா தொற்றுக்கு முகங்கொடுப்பதற்காக, இராணுவம் மற்றும் நிர்மாண நிறுவனங்களின் உதவியுடன் தற்காலிக வைத்தியசாலைகள், கட்டில்களை நிர்மாணித்தல்.
- சுவாசிப்பதற்கு சிரமப்படும் நோயாளர்களுக்கு உடனடியாக ஒட்சிசன் வழங்கும் வெண்டிலேட்டர் பெற்றுக்கொள்வதற்கும், ஒட்சிசனின் அளவை கூட்டிக்கொள்வதற்கும் சர்வதே ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல். அதற்கான விமானச் சேவைகளை தயார்படுத்தல்.
- சுகாதார பிரிவினருக்கு ஒத்துழைப்பு நல்குவதற்கு, ஓய்வுபெற்ற வைத்திய துறையினர், தனியார் துறையினர், ஆகியோரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல்.
- தடுப்பூசி வழங்கல் செயற்பாட்டை துரிதப்படுத்துவதுடன், தற்போதைய முறைமையை கைவிட்டு அவசர கொள்முதல் செயற்பாட்டை முன்னெடுத்தல்.
- 12 வயதுக்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு பெற்றோரின் ஒத்துழைப்புடன் தடுப்பூசியை ஏற்றும் செயற்பாடுகளை துரிதப்படுத்தல்.
- தடுப்பூசி ஏற்றலை துரிதப்படுத்தும் அதேவேளை, வைத்திய துறையினரிடமிருந்து அதற்கான கால எல்லையை பெற்றுக்கொள்ளல்.
- பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை அதிகரித்தல்
- சுகாதார தரப்பினருக்கு ஒவ்வொரு நாளும் பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுக்கும் அதேவேளை, தனிப்பட்ட பயன்பாட்டுக்காக சுகாதார உபகரணங்களை வழங்குதல்.
- கொரோனா மரணங்கள் தொடர்பில் சரியான தகவல்களை பேணுதல்.
- கொரோனா செயலணிக்கு சட்டரீதியில் அங்கிகாரம் இல்லை என்பதால், அதனை கலைத்துவிட்டு அனர்த்த முகாமைத்துவ சபையை ஸ்தாபித்தல். அதனூடாக அமைச்சரவை செயற்படவேண்டும்.
- அமைச்சரவைக்கு ஒத்துழைப்பு நல்குவதற்காக, உலக சுகாதார ஸ்தாபனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட நபர்கள் அடங்கிய விசேட ஆலோசனை குழுவை நிறுவுதல்.
- சுகாதாரம் தொடர்பிலான பாராளுமன்ற செயற்குழுவை வாரத்துக்கு ஒருதடவை கூட்டுதல்.
- கொவிட்-19 தொடர்பிலான சகல செயற்பாடுகளுக்குக்கும் வைத்தியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். அதற்கு இராணுவக் குழு உள்ளிட்ட ஏனைய குழுக்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.
- எதிர்க்கட்சியினால் சமர்பிக்கப்பட்டுள்ள மக்கள் சுகாதார சட்டமூலத்தை அவசர சட்டமூலமாக கருதி, அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றவேண்டும்.
- சர்வதேச நாணய நிதியத்தில் நிதியை பெற்று, அதனை இந்நாட்டின் சுகாதார மேம்பாட்டுக்காக பயன்படுத்தவேண்டும். 800 மில்லியன் அமெரிக்க டொலரில், தடுப்பூசியை பெற்றுக்கொள்ளல் மற்றும் கொரோனா செலவுகளுக்கு பயன்படுத்தலாம்.
- நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி கொள்வதற்காக, சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்
- நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக அரச, தனியார் துறைகளில், பணியாற்றுவோர் வீடுகளில் இருந்தே பணியாற்றும் முறைமைக்கு தொடர்ந்தும் அனுமதியளித்தல்.
- பொதுப் போக்குவரத்து சேவைகளை அரைக்கு அரைவாசியாக குறைத்து, அத்தியாவசிய பயணங்களுக்கு மட்டுமே பயன்படுத்துவதற்கு அனுமதியளித்தல்.
- தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாத சகல சுற்றுலாப்பயணிகளும் நாட்டுக்குள் நுழைந்துவிடாது நாட்டின் எல்லைகளை மூடிவிடுதல்.
- பிள்ளைகளின் கல்வித் தொடர்பில் கவனம் செலுத்தல், மீண்டும் பாடசாலைகளை ஆரம்பித்தல், சகலருக்கும் சமமாக கல்விக் கிடைப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுத்தல்.
- கொவிட்-19 செலவுகளை கண்காணிப்பதற்காக, தனியாக வரவு- செலவை நிறுவவேண்டும். அது பாராளுமன்றத்துக்கும், அமைச்சரவைக்கு பொறுப்புகூறவேண்டும்.

மேலே குறிப்பிட்ட யோசனைகளை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளதாக தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, அதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

## செலவின்றி கட்டுப்படுத்தலாம்

ஒன்றை பாராளுமன்றத்தில் நியமித்து, அக்குழுவை சுகாதார அமைச்சுடன் தொடர்புபடுத்தி நாட்டின் நிலைமைகள் தொடர்பில் அதனூடாகக் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற வேண்டும் என்றார்.

கிராம மட்டத்திலும் குழு ஒன்றை அமைக்க வேண்டும். கிராமங்களில் சுகாதாரப் பாதுகாப்புக்களைப் பின்பற்றாதவர்கள் தொடர்பில் தகவல்களை வழங்கி, அதனை சரி செய்ய அக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கிராமத்தில் எவருக்காவது நோய் அறிகுறிகள் தென்பட்டால் அவர்களை விரைவாக பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்த அந்தக் குழு ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதுபோன்ற செயற்பாடுகளை முன்னெடுத்தால் அதிக நிதியை செலவிடாது கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## 10 வயது சிறுமி துஷ்பிரயோகம்; கொரோனா தொற்றாளர் கைது

தனது சட்டத்தரணியின் ஊடாக, அளுத்கம பொலிஸ் நிலையத்தில் நேற்று (17) சரணடைந்தார். 60 வயதான சந்தேகநபர், சிறுமியின் தந்தையின் மாமா ஆவார்.

நெருங்கிய உறவினரான இவர், கடந்த ஏப்ரல் மாதம் முதல், சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்துள்ளார். தனது வீட்டுக்கு விளையாடுவதற்கு வருகைதந்த போதே சந்தேகநபர், சிறுமியை வன்புணர்ந்துள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது.


பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபரை, பொலிஸார் தேடியுள்ளனர். எனினும், அவர், அப்பிரதேசத்தில் இருந்தே தலைமறைவாகிவிட்டார்.

கொழும்பில் தலை மறைவான அந்நபர், தனியார் வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொண்டுள்ளார். அதில், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதியானது. அதன்பின்னர், சட்டத்தரணியின் ஊடாக, பொலிஸ் நிலையத்தில் ஆஜரானார்.

அதன்பின்னர், தர்ஹா நகரில் இருக்கும் இராணுவத்தின் கொரோனா சிகிச்சை மையத்துக்கு அவர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

## பரஸ்பர துப்பாக்கி சூட்டில் இருவர் பலி

ஹம்பாந்தோட்டை, சூரியவெவ வெவேகம பகுதியில் பொலிஸாருக்கும், தங்கத்தை கொள்ளையிட்டு சென்றவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.



சந்தேகநபர்களை கைது செய்வதற்காக வெவேகம பகுதிக்கு இன்று (17) பிற்பகல் சென்ற பொலிஸார் மீது, சிலர் துப்பாக்கி பிரயோகம் நடத்தியுள்ளனர். இதனையடுத்து பொலிஸாரும் பதில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

அதில், பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர்களில் சிலர் காயமடைந்தனர். அவர்கள், சூரியவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக ஹம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். அங்கே, இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவத்தின் போது, பொலிஸ் ஜீப் வண்டி, வீதியை விட்டு விலகி, மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. அதில், பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார். அவர், சூரியவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## சீனப் பெண் இங்கு மரணம்

யூ ஜுவோ என்ற பெண்ணே, மேலே குறிப்பிட்ட விலாசத்தில் இலங்கையருடன் வசித்து வந்துள்ளார். கடந்த 15ஆம் திகதியன்று தொண்ட வலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். நேற்று (16) மாலை 6.10 மணியளவில் மரணமடைந்துவிட்டார்.

அப்பெண்ணின் கணவன், இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் மரணமடைந்துவிட்டார். அவருக்கு எந்தச் சொந்தக்காரர்களும் இலங்கையில் இல்லை. எனினும், அப்பெண்ணின் தாயார், சீனாவில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## டெல்டாவின் 3 புதிய பிறழ்வுகள் கண்டுப்பிடிப்பு

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், டெல்டா வைரஸே நாட்டில் பரவி வருவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த வைரஸ் ஏனைய கொரோனா வைரஸ்களை விட 70 மடங்கு வேகமாகப் பரவும். இலங்கையில் பரவும் டெல்டா வைரஸ் பிரதானமாக மூன்று வைரஸ்களாக திரிபடைந்துள்ளது. இந்த வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும், அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றார்.

ஜூலை 15ஆம் திகதிக்கும் 18ஆம் திகதிக்கும் இடைப்பட்டக் காலத்திலேயே நாட்டில் டெல்டா வைரஸ் வேகமாகப் நாட்டில் பரவுவதாக விசேட வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர். எனினும், இந்த காலப் பகுதிக்குள்ளேயே நாட்டில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு, மக்களை வீதிக்கிறக்கி போராட வைத்தார்கள் என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் பல போராட்டங்களை முன்னெடுத்திருந்தன. போராட்டங்களை நடத்த வேண்டாமென நாம் கூறியிருந்தோம் என்றார்.

டெல்டா வைரஸின் ஆபத்துத் தொடர்பில் நாம் முன்கூட்டியே கூறியிருந்தோம். இக்காலப் பகுதியில் அரசாங்கம் பயணக் கட்டுப்பாடுகளை விதித்தபோதும், போராட்டத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறார்கள் என்றார். இதுபோன்ற விமர்சனங்களாலேயே நாட்டை முடக்க முடியாது போனது என்றார்.

போராட்டக்காரர்களை தனிமைப்படுத்தலுக்கு அனுப்பியபோதும் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென மக்களை ஒன்று திரட்டிப் போராடினார்கள் எனவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொடர்பான மருந்துக்களை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கூறுவதற்கு முன்னர், விசேட வைத்திய நிபுணர்களின் கருத்துக்களை கேட்க வேண்டும் என்றார்.

## யாழ்.எம்.பிக்கு கொரோனா

பொன்னம்பலம், தனக்கும், தனது மனைவி மற்றும் மகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகையால், தன்னுடன் அண்மைக் காலங்களில் மிகவும் நெருங்கிப் பழகியவர்கள் தனிமையில் இருந்து, பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு, அவர் அப்பதிவின் ஊடாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கதிகலங்கி நிற்கிறது கல்முனை

தொடர்பாகவும் நேற்று (17) விளக்கமளிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்றைய நாளில் (நேற்று) மாத்திரம் 1,000 நோயாளிகள் உள்ளனர். ஆனால், இருப்பதோ 500 கட்டில்கள்தான். மிகுதி 500 நோயாளிகளும் தரையில் அமர்ந்து சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

"தற்போதைய நிலைமையில், ஒரு வாரத்தில் கட்டில்களின் எண்ணிக்கையை இரு மடங்காக அதிகரிக்கவேண்டியுள்ளது. சராசரியாக தினமும் 100 தொற்றுக்களும் 2 மரணங்களும் ஏற்பட்டு வருகின்றன. தடுப்பூசி தாமதமானதன் விளைவே இது.

"எமது பிராந்தியத்திலுள்ள 07 ஆதார வைத்தியசாலைகளில் கொவிட் பிரிவுக்கென ஆக 200 கட்டில்களே உள்ளன. இடைத்தங்கல் நிலையங்களில் 370 கட்டில்கள் உள்ளன. கட்டில்கள் அனைத்திலும் நோயாளிகள் நிறைந்திருப்பதால் இடநெருக்கடி தோன்றியுள்ளது.

"குறிப்பாக, கல்முனைப் பிராந்தியத்திலுள்ள சகல கொரோனா இடைத்தங்கல் நிலைய வைத்தியசாலைகளிலுள்ள கொவிட் சிகிச்சை நிலையங்கள் அனைத்திலும் நோயாளிகள் நிரம்பிவழிவதால், சுமார் 500 நோயாளிகள் இடமில்லாமல், அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

"கல்முனைப் பிராந்தியம் மீண்டும் கதிகலங்கி நிற்கும் நிலை எழுந்துள்ளது. எமது பிராந்தியத்தில் அதி ஆபத்து நிறைந்த பிரதேசங்களாக அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, கல்முனை வடக்கு, நிந்தவூர், திருக்கோவில் மற்றும் பொத்துவில் ஆகியன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன" என்றார்.

LK Newspapers Viber Community

இலங்கையில் உற்பத்தியாகும்

# ஒட்சிசனின் அளவு போதுமானதல்ல

இலங்கையில் தற்போது கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது ஆரோக்கியமான சூழல் இல்லையெனத் தெரிவித்த விஷேட வைத்திய அதிகாரி ஆனந்த விஜயவிக்ரம, இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஒட்சிசனின் அளவு எதிர்காலத்தில் போதுமானதாக இருக்காது எனவும்



தெரிவித்துள்ளார்.

ஊடகவியளாலர் எழுப்பிய வினாவுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த விஷேட வைத்திய அதிகாரி ஆனந்த விஜயவிக்ரம, ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இரவு வரையில் அவசர சிகிச்சை பிரிவுகளில் கொரோனா தொற்றாளர்கள் 188 பேர் சிகிச்சை பெற்று வந்தார்கள்.

குறித்த நோயாளர்களுக்காக ஒரு நாளைக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் செலவிட வேண்டியுள்ளது. மக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இரண்டு மீற்றர் இடைவெளியை பின்பற்றுமாறும் முகங்களையும் கைகளையும் வெளியிலிருந்து வீடு வந்தவுடன் சவர்க்காரமிட்டுக் கழுவுமாறும் கேட்டுள்ளார்.



இலங்கைக்கு ஒட்சிசன் எடுத்துவர

## இந்தியாவுக்கு 'சக்தி' கப்பல் பயணம்

இலங்கை கடற்படைக்கு சொந்தமான 'சக்தி' எனும் கப்பல் நேற்று (17) அதிகாலை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து சென்னை நோக்கி பயணித்தது. இக்கப்பல் இந்தியாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட ஒட்சிசன் தொகையை இலங்கைக்கு எடுத்துவருவதற்காகவே பயணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா தொற்றாளர்களுக்கு தொடர்ந்து சிகிச்சையளிப்பதற்காக இந்தியாவிடம் இருந்து ஒரு தொகை ஒட்சிசன் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் குறித்த கப்பல் இன்று மாலை இந்தியாவை சென்றடைய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இக்கப்பல்,மீண்டும் அடுத்தவாரம் இலங்கையை வந்தடையும்.

## கிரிபத்கொட நகரில் திடீர் தீ

கிரிபத்கொட நகரிலுள்ள தொடர் மாடிக் கட்டடமொன்றின் கீழ் மாடியில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில், சிறுவர்கள் உட்பட 12 பேரை மீட்ட சம்பவமொன்று நேற்று இடம்பெற்றது.

தீ விபத்தின்போது, கட்டடத்துக்குள் சிக்கியிருந்த சிறுவர்கள் உட்பட 12 பேர் பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகளால் காப்பாற்றப்பட்டனர்.

இதேவேளை, புகை காரணமாக சுவாசப் பிரச்சினை ஏற்பட்டு 5 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கிரிபத்கொட பொலிஸார் தெரிவிக்கின்றனர். கொழும்பு, கம்பஹா தீயணைப்பு பிரிவினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் என்னவென்று இதுவரையும் கண்டுபிடிக்கவில்லையெனவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பவித்ராவை புகழ்ந்தார் கெஹலிய

கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி சிறப்பாகச் செயற்பட்டார் என தற்போதைய சுகாதாரத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல புகழ்ந்துள்ளார்.



தனது டுவிட்டர் பக்கத்தில் இது குறித்து அவர் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், அமைச்சரவை மாற்றத்தில் சுகாதாரத் துறை அமைச்சராகத் தான் நியமிக்கப்பட்டமை தான் செய்த பாக்கியம் என்று கருத வேண்டும் என்று கூறிய அவர், கொவிட்-19 தாக்கத்தால் ஏற்பட்டுள்ள சவாலை வெற்றிகொள்ள நாட்டு மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.



வியாழேந்திரனின் முயற்சியால்

## காணியை விடுவிக்கத் தீர்மானம்

ஜனாதிபதி கோட்டபாயவின் ஆலோசனைக்கு அமைவாக, கடந்த காலங்களில் பாதுகாப்புப் படைவசமிருந்த அரச மற்றும் பொது மக்களது காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பின்தங்கிய கிராமிய பெருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வேண்டுகோளுக்கு இணங்க மட்டக்களப்பு மாவட்டத்திலும் படையினர் வசமிருந்து வருகின்ற பல காணிகளை விடுவிக்கும் வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் ஒரு கட்டமாக அண்மையில் கும்புறுமூலையில் மூன்று தசாப்த காலமாகப் படையினர் வசமிருந்த 30 ஏக்கருக்கு மேற்பட்ட தனியார் காணியொன்று விடுவிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று முறக்கொட்டாஞ்சேனை, கொக்கட்டிச்சோலை பகுதிகளில் இராணுவ முகாம் அமைந்திருக்கும்

> கொக்கட்டிச் சோலையில் இராணுவ முகாம் அமைந்திருக்கும் காணியை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் நேரில் சென்று பார்வையிட்டார்

காணிகளையும் விடுவிப்பதற்காக படைத்தரப்பினருடன் பல்வேறு பட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கடந்த 15 ஆம் திகதி கொக்கட்டிச்சோலையில் இராணுவ முகாம் அமைந்திருக்கும் காணியை இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளதோடு இராணுவமுகாமுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி ஜெனரல் ஹர்சன குணரத்னவுடன் கலந்துரையாடியதன் பின்னர், இராணுவத் தரப்புப் பிரதானி லெப்டினன் ஜெனரல் நளின் கொஸ்வத்தவுடன் தொலைபேசியில் உரையாடி தனியாருக்குச் சொந்தமான குறித்த காணியை விடுவிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

## மீனவக் கிராமங்களை அபிவிருத்தி செய்ய ஆலோசனை

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கடற்றொழில் அமைச்சராக செயற்பட்ட காலப்பகுதியில், அவரது எண்ணக்கருவுக்கமைய ஆரம்பிக்கப்பட்ட 'மீனவ கிராமங்களை' அபிவிருத்தி செய்வதற்கு பிரதமரால், வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்தவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர், கடற்றொழில் அமைச்சராக சேவையாற்றிய காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் உள்ள கடலோரப் பிரதேசங்கள் மற்றும் குளங்களை அண்மித்ததாக 60 மீனவ கிராமங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த மீனவ கிராமங்களை மேம்படுத்தி அபிவிருத்தி செய்தல், பராமரித்தல் மற்றும் அக்கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இதன்போது பிரதமர் எடுத்துரைத்தார்.

அம்மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கு 2022 வரவு செலவுத் திட்டத்திற்காக சமர்ப்பிக்க வேண்டிய முன்மொழிவொன்றை (வரவு செலவுத்திட்ட முன்மொழிவு) தயாரிக்குமாறு பிரதமர், இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்தவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொரோனா பரவல்:

## கிளிநொச்சிக்கு அபாயம்

■ மு.தமிழ்ச்செல்வன்

அபாயம் மிக்க மாவட்டமாக கிளிநொச்சி அடையாளம் காணப்பட்டுள்ளதாக, பிராந்திய தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக தொடர்ந்துரைத்த அவர், கிளிநொச்சி மாவட்டத்தில், முதலாவது கொரோனா தொற்றாளர் அடையாளம் காணப்பட்ட நாள் தொடக்கம் கடந்த மாதம் 31ஆம் திகதி வரை 1,400 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால், இந்த மாதம் முதல் 16 ஆம் திகதி மாத்திரம் 1,246



> 1,46,000 சனத் தொகையை கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில், நாளாந்தம் 100க்கும் மேற்பட்ட கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்

தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் தீவிரமாகப் பரவிவரும் கொரோனா, தற்போது கிளிநொச்சி மாவட்டத்திலும் அதிதீவிரமாகப் பரவத் தொடங்கியுள்ளது என்பதனையே இது காட்டுகின்றதெனவும், அவர் கூறினார்.

1,46,000 சனத் தொகையை கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில், நாளாந்தம் 100க்கும் மேற்பட்ட கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனரெனத் தெரிவித்த அவர், அதிலும் பரிசோதனைக்கு செல்கின்றவர்களிலேயே இந்த எண்ணிக்கையான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர் என்றும் இதுவோர் ஆபத்தான நிலைமை என்றும் கூறினார்.

## இணையத்தளங்களை பதிவு செய்யுங்கள்

### ஊடக அமைச்சு அறிவுறுத்தல்

■ அஸ்லம் எஸ்.மௌலானா

நாடளாவிய ரீதியில் இயங்கும் இணையத்தளங்களைப் பதிவு செய்து, அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு ஊடக அமைச்சு அறிவித்துள்ளது. அதேவேளை, ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட இணையத்தளங்களின் பதிவுகளைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும் ஊடக அமைச்சு கேட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை ஊடக அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலம் அறிந்து கொள்ளலாம் என அமைச்சு அறிவித்துள்ளது. இணையத்தளங்களை பதிவு செய்யும் நடைமுறை 2012ஆம் ஆண்டு முதல் அமலில் இருந்து வருகின்றது. நாட்டில் இயங்கும் அனைத்து இணையத்தளங்களும் ஊடக அமைச்சில் பதிவு செய்யப்பட்டு, அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வருடமும் அப்பதிவு புதுப்பிக்கப்பட்ட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

> நாட்டில் இயங்கும் அனைத்து இணையத் தளங்களும் ஊடக அமைச்சில் பதிவு செய்யப்பட வேண்டும்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## உறுதிப்படுத்தலை வழங்காது

■ அஸ்லம் எஸ்.மௌலானா

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பட்டங்களின் செல்லுபடித்தன்மை பற்றி இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) எவ்வித உறுதிப்படுத்தலையும் வழங்காது என தகவலறியும் சட்டத்திற்கமைய தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பை தொடர விரும்பும் இலங்கை மாணவர்கள், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்து கொள்ள முடியும். இதன்போது சர்வதேச மற்றும் பொதுநலவாய மட்டத்தில் செயற்படும் பல்கலைக் கழகங்களின் விவரங்கள் உறுதிப்படுத்தப்படும்.

எவ்வாறாயினும் அப்பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பாடங்களின் செல்லுபடித்தன்மை பற்றிய உறுதிப்படுத்தல்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்க மாட்டாது என அறிவிக்கப்பட்டிருக்கிறது. தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட வினாவுக்கு பதிலளிக்கையிலேயே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் சகல பட்டங்களும் இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதற்கான உத்தரவாதம் இல்லை என்பதை ஊகிக்க முடிகிறது என கல்வித்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


370 கிலோகிராம் மஞ்சளுடன்

## நபரொருவர் கைது

■ ரஜீன் ரஸ்மீன்

கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளித்தீவு பகுதியில் 370 கிலோகிராம் உலர்ந்த மஞ்சளுடன் நபர் ஒருவர் கடற்படையினரால் நேற்று (17) சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கற்பிட்டி, முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக



கடற்படையினர் தெரிவித்தனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் எஸ்.எல்.என்.எஸ் விஜய கடற்படையினர் கற்பிட்டி கிளித் தீவு பகுதியில் மேற்கொண்ட விஷேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், வள்ளம் மூலம் வேறோர் இடத்துக்கு கடத்தவிருந்ததாக சந்தேகிக்கப்படும் 10 உரப் பைகளில் பொதி செய்யப்பட்ட உலர்ந்த 370 கிலோகிராம் உலர்ந்த மஞ்சளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரும், அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட வள்ளம், 370 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சின்னப்பாடு சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

LK Newspapers Viber Community

களை நெல்லைக் கட்டுப்படுத்த தவறினால்

# நெல் உற்பத்தி வீழ்ச்சியடையும்

■ மு.தமிழ்ச்செல்வன்

களை நெல்லை (பன்றி நெல்) விவசாயிகள் ஒன்றிணைந்து கட்டுப்படுத்தத் தவறின், மாவட்டத்தில் பாரிய நெல் உற்பத்தி வீழ்ச்சி ஏற்படும் அபாயம் உள்ளதென, கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் பொன்னையா அற்புதச்சந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில், நேற்று (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையில்



களை நெல் எனப்படும் பன்றி நெல்லின் தாக்கம் அதிகரித்து வருவதாகவும் விவசாயிகள் குறித்த நெல் களையைக் கட்டுப்படுத்த தவறின், எதிர்காலத்தில் மாவட்டத்தில் நெல் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் கூறினார்.

முரசுமோட்டை, உருத்திரபுரம், கணேசபுரம், பூநகரி ஆகிய பகுதிகளிலேயே, இவை அதிகளவு பரவி வருவதாகத் தெரிவித்த அவர், வயலில் நீர் உள்ள போதும், விதைப்பதற்கு முன்பு விதைகளை சுத்திகரித்து, நீர்ப்பாசன வாய்க்கால்களை சுத்தம் செய்து, நெல்லை விதைப்பதன் மூலம் ஓரளவு கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்குமெனவும் கூறினார்.

ஆரம்பத்திலேயே களையை விவசாயிகள் இனங்கண்டு, கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தண்டு சிவப்பு நிறமாகவும் நெல்லை விட வேகமாக வளரக்கூடியது. இனிவரும் காலங்களில் களைநாசினி பயன்பாடு இல்லாது போனால், இதன் பாதிப்பு மேலும் அதிகரிக்கும் என்றும், அவர் தெரிவித்தார்.

ஐஸ் தொழிற்சாலைக்கு அருகில் இருந்து

## ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சுப்பர்மடத்தில் உள்ள ஐஸ் தொழிற்சாலைக்கு அருகிலிருந்து, நேற்று (17) காலை, ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், கோப்பாய் பகுதியை சேர்ந்த வைரவ நாகரட்ணம் (வயது 78) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நபர், நேற்று முன்தினம் (16) இரவு, அப்பகுதியில் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்ததாகவும், இந்நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டதாகவும், விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இவரின் மகன், கரவெட்டி பகுதியில் வாழ்ந்துவருவதாகத் தெரிவித்த பொலிஸார், வழிதவறி சுப்பர்மடம் பகுதிக்கு இவர் சென்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

முல்லை விவசாயிகளுக்கு

## விழிப்புணர்வு பிரசாரம்



■ விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிப்பது தொடர்பிலான விழிப்புணர்வுப் பிரசாரம், நேற்று (17) மேற்கொள்ளப்பட்டது.

வட மாகாண விவசாயத் திணைக்களம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களம் ஆகியன இணைந்து, இந்தப் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உடுப்புக்குளம், அளம்பில், கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு சேதனப்பசளை ஊக்குவிப்புத் தொடர்பிலான விழிப்புணர்வு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கொரோனா தொற்றால் மூவர் மரணம்

## கணவனை தொடர்ந்து மனைவியும் மரணம்

■ க. அகரன்

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இரண்டு பெண்கள் உட்பட மூவர் கொரோனா தொற்றால், நேற்று முன்தினம் (16) உயிரிழந்துள்ளனர்.

இம்மூவரும் சுகவீனம் காரணமாக, வவுனியா வைத்தியசாலையில் அண்மையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில், தொற்று உறுதியானது. இதையடுத்து, வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், சிகிச்சை பலனின்றி, நேற்று முன்தினம் (16) இரவு உயிரிழந்தனர்.

குறித்த மூவரும் 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காணி கையகப்படுத்தும்

## முயற்சி தடுக்கப்பட்டது





■ ஷம்ஹோனரியன் லெம்பேட்

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மருதமடு கிராமத்துக்குச் சொந்தமான 14.5 ஏக்கர் அரச காணியை அபகரிக்க மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கை, தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

வேறு கிராமத்தவர் அனுமதிப்பத்திரங்கள் இன்றி, அடாத்தாக அபகரிக்க முற்பட்டு, புனரமைப்பு பணியில் ஈடுபட்டிருந்த வேளை, சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி கவனத்துக்கு, அக்கிராம மக்கள் கொண்டு சென்றனர். இதையடுத்து, அப்பகுதிக்கு விஜயம் மேற்காண்ட சார்ள்ஸ் நிர்மலநாதன், இந்த விடயம் தொடர்பாக முசலி பிரதேச செயலாளருடன் கலந்துரையாடினார்.


முசலி பிரதேச காணி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தரும் அந்த இடத்துக்கு வருகை தந்து, இக்காணி அரச காணி என்பதை உறுதி செய்தனர்.

இதையடுத்து, காணி அபகரிக்கும் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டு, மருதமடு கிராமத்தில் காணியற்ற மக்களுக்கு இந்தக் காணிகளை பிரித்து வழங்குமாறு, முசலி பிரதேச செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

## பாழடைந்து கிடக்கும் அஞ்சல் அலுவலகம்

■ செ.கீதாஞ்சன்





முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புத்துவெட்டுவான் கிராமத்துக்குச் சொந்தமான உபஅஞ்சல் அலுவலகம், இன்று வரை பாழடைந்த நிலையில் காணப்படுவதாக, அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், நிலையான கட்டடத்தில் இயங்காத நிலையில் தற்காலிகமாக இயங்கும் இந்த உப அஞ்சல் அலுவகத்தை, வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, மக்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

இந்தக் கிராமத்துக்கான உப அஞ்சல் அலுவலகம்



போருக்கு முன்னரான காலத்தில் இருந்து தபாலக வீதியுடன் இயங்கி வந்துள்ளது.

ஆனால், தபாலகத்துக்கான காணி கட்டடங்கள் பாழடைந்துள்ள நிலையில், தற்போது கிராமத்துக்கான தபாலகம் மருத்துவ தாதிகளின் விடுதியில் ஒரு சிறிய அறையில் இயங்கிவருகின்றது.

இந்த நிலையில், இந்த அரசசேவையையும் இடமாற்றுவதாக இருந்தால், இந்தக் கிராமத்தில் உள்ள மக்களையும் வேறு இடத்துக்கு மாற்றுமாறும் தெரிவித்துள்ளனர்.

## ஆளில்லா நேரம் பார்த்து கடைக்குள் புகுந்த வாகனம்

■ எம். என். எம். அப்ராஸ், எஸ். அஷ்ரப்கான்





கல்முனையிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிப் பயணித்த கனரக வாகனமொன்று, வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில், வீதியை விட்டுவிலகி கடையொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. கல்முனை, முகைதீன் ஜும்மா பெரிய பள்ளிவாசல் அருகாமையில் நேற்று (17) அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் எவ்வித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை. எனினும், கடையின் முன்புறம் மற்றும் அருகிலிருந்த மின்கம்பம் ஆகியன சேதமடைந்துள்ளன.

விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

திருகோணமலையில்

# கடைகளுக்கு பூட்டு

■ எப்.முபாரக்



திருகோணமலை மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுப் பரவலானது சடுதியாக அதிகரித்திருப்பதைக் கருத்தில்கொண்டு நேற்று (17) முதல் அத்தியாவசிய சேவைகள் அல்லாத கடைகள், வியாபார நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு, திருகோணமலை நகர சபையில் நேற்று (17) நடைபெற்றது.

மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு அமைய, நேற்று முதல் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து வியாபார நிலையங்களையும் மூடுவதற்குத் தீர்மானித்திருப்பதாகத் திருகோணமலை நகரசபைத் தலைவர் என்.ராஜநாயகம் இதன்போது தெரிவித்தார்.

மேலும், மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் முகமாக மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள சிறுகடைகள் திறக்கப்பட்டிருக்கும் எனவும், நடமாடும் சேவைகள் மூலம் மீன் மற்றும் மரக்கறி வகைகளை விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பட்டணமும் சூழலும் பிரதேச சபை தலைவர் சதுன் தர்ஷன ரத்னாயக்க, திருகோணமலை வர்த்தக சம்மேளனத் தலைவர் கே.குலதீபன் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.



## போதைப்பொருள் விற்பனை குழு சிக்கியது

■ கா.கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல், விற்பனையில் ஈடுபட்டுவந்த குழுவொன்றை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று (17) அதிகாலை, களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினரால் வீடொன்றில் வைத்து இக்கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 300 கிராம் ஐஸ் போதைப்பொருளும் 15 கிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டதுடன், போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் கார் மற்றும் மோட்டார் சைக்கிளும் 250,000 ரூபாய் பணமும் மீட்கப்பட்டன.







## பிறந்த நாளில் இரத்ததானம்

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தனின் 46ஆவது பிறந்த நாளையொட்டிய இரத்தான நிகழ்வு, வாழைச்சேனை இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நேற்று (17) நடைபெற்றது.

வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் திருமதி ஷோபா ஜெயரஞ்சித் தலைமையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்தியர் நிரோசன் லோரன்ஸ் பங்குபற்றலுடன், மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அங்கத்தவர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர். (படங்கள்: எம்.எம். அஹமட் அனாம்)

## வெளியில் வைத்து சிகிச்சையளிப்பு

■ வி.ரி.சகாதேவராஜா





தீவிரமடைந்து வரும் கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக வைத்தியசாலைகளில் வெளிநோயாளர்களை வெளியில் வைத்து சிகிச்சையளிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில், கல்முனைப் பிராந்தியத்திலுள்ள காரைதீவுப் பிரதேச வைத்தியசாலையில் இவ்விதம் தினமும் வெளிநோயாளர்கள் வெளியில் பாதுகாப்பாக வைத்துச் சிகிச்சை அளிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக, வைத்தியசாலையின் முன் வாயிலில் பாதுகாப்பான கருமபீடம் அமைத்து, வெளிநோயாளர் பதிவு தொடக்கம் சிகிச்சை வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மருந்து வழங்கல், பிரத்தியேக கருமபீடத்தில் வழமை போன்று நடைபெறுகிறது. அதேவேளை, சந்தேகத்துக்கு இடமான நோயாளிகளுக்கு அன்டிஜன் சோதனை மேற்கொள்ளப்பட்டுவதாகவும் விடுதிகளில் தங்க வைக்கப்படுவோரும் அன்டிஜன் சோதனையின் பின்னரே அனுமதிக்கப்படுவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தோட்டக் கம்பனிகளுக்கு

## இறுக்கமும் உருக்கமுமான கடிதம் அனுப்பிவைப்பு

### வடிவேல் சுரேஸ் எம்.பி தெரிவிப்பு

கொரோனா நோய்த்தொற்றுக்கு மத்தியில் பொருளாதாரத்துக்கும் நிவாரணத்துக்கும் நடுவில் சிக்கி தவித்துக் கொண்டிருக்கும் மலையக மக்கள் சார்பாக, ஓர் உருக்கமானதும் இறுக்கமானதுமான கடிதத்தை, தோட்ட கம்பனிகளுக்கு அனுப்பியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (16) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், 22 கம்பெனிகளுக்கும் தனது கையெழுத்தில் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்தார்.

பெருந்தோட்டங்களில் சில பகுதிகள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக மலையக மக்கள் வறுமையின் உச்சத்தில் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

எனவே, உடனடியாக பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அனைத்து பெருந்தோட்டங்களில் கூட்டுறவு சங்கங்கள் நடைமுறையில் இருக்கின்றன. அவற்றில் காணப்படுகின்ற நிதிகளைத் திரட்டி பகுதி அளவிலேனும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும் என்றார்.

மேலும், தனிமைப்படுத்தப்பட்டுள்ள மக்களுக்கு, உடனடியாக உணவுப் பொருள்களையோ உலர் உணவுப் பொருள்களையோ நிவாரணமாக வழங்க வேண்டும் என பிரதேச செயலகங்களுக்கு மின்னஞ்சல் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.



வீடுகளில் சிகிச்சை பெறுபவர்களுக்கு

## நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை

மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகி வீடுகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக, விசேட வேலைத்திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான நாலக பண்டார கொட்டேகொட தெரிவித்தார்.

மாத்தளை, யட்டவத்த பிரதேச கொரானா தொற்று ஒழிப்பு குழு கூட்டத்தில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்வாறு தெரிவித்தார்.

குறித்த நிவாரணத் திட்டங்களுக்காக கிராமிய குழுக்களை தெளிவுபடுத்தியுள்ளதுடன், இதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றார்.

மேலும் பிரதேச செயலகம், உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து, மக்கள் இலகுவாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளவதற்காக தகவல் மத்திய நிலையமொன்றையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றார்.



தடுப்பூசி ஏற்றச்சென்ற

## மடக்கும்புர மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

நீலமேகம் பிரசாந்த்

தடுப்பூசி ஏற்றிக்கொள்வதற்காகச் சென்ற வட்டகொடை, மடக்கும்புர தோட்ட மக்கள், தடுப்பூசி இன்மையால் ஏமாற்றத்துடன் திரும்பிய சம்பவம், நேற்று (18) இடம்பெற்றுள்ளது.

கொத்மலை சுகாதார பிரிவுக்கு உட்பட்ட குறித்த தோட்டத்தைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் நேற்று (17) தடுப்பூசி செலுத்தும் மத்திய நிலையத்துக்குச் சென்றுள்ளனர்.

> தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள், வேலைக்குச் செல்லாமல், தடுப்பூசி ஏற்றிக்கொள்ளச் சென்றிருந்த நிலையில், தடுப்பூசி பற்றாக்குறையால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்

குறிப்பாக, தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள், வேலைக்குச் செல்லாமல், தடுப்பூசி ஏற்றிக்கொள்ளச் சென்றிருந்த நிலையில், தடுப்பூசி பற்றாக்குறையால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அத்துடன், அங்கு முறையான ஒழுங்கமைப்பு இல்லை என தெரிவிக்கும் இம்மக்கள், இனிவரும் காலங்களிலாவது முறையான திட்டமிடலை மேற்கொண்டு அனைவருக்கும் தடுப்பூசி செலுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

சாரதி பயிற்சி தொடர்பான

## பரீட்சைகள் பிற்போடப்பட்டன

இரா. யோகேசன்

மோட்டார் வாகன திணைக்களத்தின் நுவரெலியா மாவட்ட கிளையால் நடத்தப்படும் வாகன சாரதி பயிற்சி தொடர்பான எழுத்து மூல பரீட்சைகள், செயன்முறைப் பரீட்சைகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதென, அத்திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தற்போது வேகமாகப் பரவி வரும் கொரோனா தொற்றால், ஹட்டன், மஸ்கெலியா, தலவாக்கலை உள்ளிட்ட மலையக பிரதேசங்களிலிருந்து அதிகளவு தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

எனவே, இந்த நிலையைக் கருத்திற்கொண்டு, இப்பரீட்சைகளை பிற்போட தீர்மானித்துள்ளதாகவும், இப்பரீட்சைகள் நடைபெறும் திகதி தொடர்பான அறிவித்தலை, சாரதி பயிற்சி நிலையங்கள் ஊடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தலவாக்கலையிலுள்ள

## இரண்டு அரச வங்கிகளுக்குப் பூட்டு

பி.கேதீஸ்

தலவாக்கலை நகரிலுள்ள இரண்டு அரச வங்கி கிளைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரச வங்கியொன்றில் கடமையாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து, நேற்று (17) செவ்வாய்கிழமை முதல் வங்கி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அத்துடன், மற்றுமொரு வங்கியும் கடந்த சில நாள்களாகவே மூடப்பட்டுள்ளது. குறித்த வங்கியில் கடமையாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியானதை அடுத்து. அது தற்காலிகமாக மூடப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவசர வேண்டுகோள்:

# ‘ஹட்டனை முடக்கவும்’

எம். கிருஷ்ணா, துவாரக்ஸன்

ஹட்டன் நகரம் மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களில் அண்மைக் காலமாக கொரோனா தொற்றுப் பரவல் வெகுவாக அதிகரித்து வருகின்றது.

எனவே, உடனடியாக ஹட்டன் நகரத்தை முடக்கி, சன நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி, பொதுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு நகர வர்த்தகர்கள் முன்வர வேண்டுமென, ஹட்டன் - டிக்கோயா நகர சபை உறுப்பினர் டொக்டர் அழகமுத்து நந்தகுமார் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

நாட்டில் கொரோனா மற்றும் டெல்டா வைரஸ் பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. மலையகமும் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள், மரணித்தவர்கள் எண்ணிக்கையும் உயர்ந்து காணப்படுகின்றன.

அந்தவகையில், ஹட்டன் நகரம் மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களிலும் கொரோனா தொற்றுப் பரவலும் மரணங்களும் தினசரி அதிகரித்த வண்ணம் உள்ளன.

நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு இரத்தினபுரி, பலாங்கொடை, பதுளை, பண்டாரவளை, கேகாலை முதலான நகரங்களை இரண்டு வார காலத்துக்கு மூடுவதற்கு அங்குள்ள வர்த்தக சங்கங்கள் தாமாகவே முடிவெடுத்து, மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளன.



அதேபோல், மலையகத்தின் முக்கிய கேந்திர நிலையமாகக் காணப்படும் ஹட்டன் நகரத்தில் உள்ள வர்த்தகப் பெருமக்கள் உடனடியாக கடைகளை மூடுவதற்கு முன்வர வேண்டியது அவசியமாகும்.

நகரம் முடங்கும் போது பொதுமக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து விடும். அதன் ஊடாக ஒரளவு கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். இந்த விடயத்தில் மக்களின் பாதுக்காப்பை உறுதிப் படுத்தும் வகையில் வர்த்தகர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எச்சரிக்கை:

## கண்டியில் அதிகரிக்கும் கொரோனா மரணங்கள்

செஹன் செனவிரத்ன

கண்டி மாவட்டத்தில் அன்றாட கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாகவும் இதற்கமைய, ஜூலை மாதத்தை விட, இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களிலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என, கண்டி மாவட்டத்தின் பிரதேச தொற்று நோய் விசேட வைத்தியர் பசன் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று (17) நடைபெற்ற மத்திய மாகாண கொரோனா ஒழிப்பு குழு கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கண்டி மாவட்டத்தில் கொரோனா மரணங்கள் அதிகரிப்பது குறித்து, தீவிர அவதானம் செலுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவித்த அவர், இதுவரை இங்கு 30 வயதுக்கு மேற்பட்ட 30 சதவீதமானவர்கள் கொரோனா தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுள்ளனர் என்றார்.

இவர்களுக்கான இரண்டாவது டோஸ் நேற்று ஆரம்பிக்கப்பட்டதென்றும் தடுப்பூசி செலுத்திக்கொண்டாலும் சமூக இடைவெளி, முகக் கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார வழிகாட்டல்களை அனைவரும் பின்பற்றுவது அவசியம் என்றார்.

முகக்கவசம் அணிவதை தவிர்ப்பவர்களால்

## தொற்று வேகமாக பரவும் அபாயம்

சதத்.எச்.எம்.ஹேவா

முகக் கவசம் அணியும் சுகாதார சட்ட திட்டங்கள், ஹட்டன் நகரில் உரிய முறையில் கடைபிடிக்கப்படாமையால், நகரில் தொற்று வேகமாகப் பரவும் நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஹட்டன் நகருக்கு வருகைத் தரும் சில பொதுமக்கள், சில நடைபாதை வியாபாரிகள், சில பஸ்களின் நடத்துநர்கள், சாரதிகள், கடைகளிலுள்ள வர்த்தகர் சிலர் இவ்வாறு முகக் கவசம் அணியாமல் இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தற்போது ஹட்டன் நகரில் அதிகமான தொற்றாளர்கள் தினமும் பதிவாகி வருவதுடன்,



மரணங்களும் அதிகம் பதிவாகி வரும் நிலையில், சிலர் சுகாதார சட்டதிட்டங்களை உரிய முறையில் பின்பற்றாமையானது, ஏனையோருக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள், இந்த விடயம் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

## உதவும் கரங்கள்...

பி.கேதீஸ்

குருணாகல் மாவட்டத்தில் மாவத்தகம சிங்ஹாலோக்கபுர பிரதேசத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு கால்களை இழந்த ஒருவருக்கும், மாத்தளை கந்தேநுவர அல்வத்த கீழ்பிரிவு தோட்டத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு கால்களை இழந்த ஒருவருக்கும் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ஆர்.ரமேஷ்வரனின் வேண்டுகோளுக்கமைய சக்கர கதிரைகள் வழங்கப்பட்டன. மேலும் அக்குடும்பங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டதோடு, அவர்களின்



பிள்ளைகளுக்கு செயலி ஊடாக கல்வி பயில்வதற்குப் புதிய திறன்பேசி ஒன்றும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் சிரேஷ்ட அங்கத்தவரும் கேகாலை மாவட்ட அமைப்பாளருமான சு. அமுதன், ஏ. பத்மசிறி, யோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.





வீதி அனுமதிப்பத்திரத்துக்கு எதிராக

## சேவை நிறுத்த போராட்டம்

எம்.கிருஷ்ணா

ஹட்டன்- டெம்பஸ்டோ ஊடாக, ஹைட்ரி வரை பயணிக்கும் தனியார் பஸ்கள் இரண்டாவது நாளாகவும் சேவை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



குறித்த வீதியில், ஏழு பஸ்கள் சேவையில் ஈடுபடுவதுடன், தற்போது புதிதாக ஒரு பஸ், சேவைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக் காரணமாக, தனியார் பஸ் சேவையை முன்னெடுக்க முடியாத நிலையில், மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் மேலும் ஓர் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

எனவே, வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என பஸ் உரிமையாளர்களும் ஊழியர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

LK Newspaper Viber Community

# முன்மாதிரியான செயற்பாடுகளைப் பின்பற்றுவதே காலத்தின் தேவை

நின்றுகொண்டிருந்தவர் மயங்கிவிழுந்து மரணம்; சைக்கிளில் பயணித்தவர் கீழே விழுந்து மரணம்; வீட்டுக்குள்ளே இருந்தவர், கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணம்; 20 வயதுக்கு கீழ்பட்டவர்கள், கைக்குழந்தைகளும் பிறந்த சிசுகளும் மரணமடைகின்றனர் என்ற செய்திகளுக்குக் குறைவே இல்லை. ஆனால், இவற்றையெல்லாம் 'செவிடன் காதில் ஊதிய சங்கொலியைப் போல', கேட்காமல் அசண்டையீனமாகச் செயற்படுவது ஆபத்தானது.

பொது முடக்கமொன்றுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகள் எல்லாம் தூக்கியெறியப்பட்டன. அவை, தூசு தட்டப்படுவதாகத் தகவல்கள் கிடைக்கின்றன. இதற்கிடையே முக்கியமான நகரங்களைச் சேர்ந்தவர்கள், சுயமாகவே நகரங்களை மூடிக்கொண்டுள்ளனர். கொரோனா வைரஸ் தொற்று வியாபித்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பதால், சுயமுடக்கத்துக்கு வித்திட்டுக்கொண்டனர்.

இந்தச் சுயமுடக்கமே, பொதுமுடக்கமாக மாறுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. வார இறுதியில் பொதுமுடக்கத்துக்குச் சென்று, அதன்பின்னர் ஓரிரு மாதங்களுக்கு முடக்குவதற்கும், இடையில் சில தளர்வுகளை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் ஆலோசித்து வருவதாகச் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாளொன்றுக்கு இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை, மரணிப்போரின் எண்ணிக்கை, வைத்தியசாலைகளின் கொள்ளளவுக்கு மேல், அனுமதிக்கப்படும் தொற்றாளர்கள் உள்ளிட்ட எண்ணிக்கையை கவனத்தில்கொண்டு, பொதுமுடக்கத்துக்குச் சென்றுதிரும்புவது உசிதமானது.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால், மனிதர்களே இல்லாத நாடொன்று உருவாகிவிடுமாயின், சவக்குழிகளின் மீதேறியே வானத்தை அண்ணாந்து பார்க்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

ஆளும், எதிர்க்கட்சிகளின் பேதங்களின்றி, அரசியல் இலாப நோக்கமின்றி, பொதுமுடக்கத்துக்குச் சென்று திரும்புவதே, இந்த நேரத்துக்கு உகந்ததாகும். தாமதமாகிவிட்டது என்றாலும், சரியான முடிவை எடுக்க வேண்டும். இல்லையேல் நாட்டைத் திறக்க முடியாத நிலைமையே ஏற்படும்.

சுயமுடக்கத்துக்குள் பல நகரங்கள் முடங்கிவிட்டன. இன்னும் பலர், வீடுகளை விட்டு வெளியேறுவதே இல்லை. எனினும், நாளாந்தம் தொழிலுக்குச் சென்றால் மட்டுமே வயிற்றை நிரப்பிக்கொள்ள முடியும் என்றிருப்போரும் அலுவலகங்களுக்குச் சென்றால் மாத்திரமே, கடமைகளைச் செய்துமுடிக்க முடியும் என்னும் நிலையில் இருப்பவர்களும் வெளியில் தலையைக் காட்டுகின்றனர்.

முகக்கவசமொன்றை அணிந்தவர்கள், இரண்டு முகக்கவசங்களை அணிகின்றனர். இன்னும் சிலர் மூன்று முகக்கவசங்களை ஏககாலத்தில் அணிந்து செல்கின்றனர். பிறழ்வடைந்த கொரோனாவின் வீரியத்தால், பல உயிர்கள் கண்முன்னே பறிக்கப்படுகின்றன. அந்த அச்சத்தால், இவ்வாறான சுயகட்டுப்பாடுகளைத் தங்களுக்குத் தாங்களாகவே விதித்துக்கொள்கின்றனர்.

கொரோனா வைரஸின் பிறழ்வு டெல்டாவாக மாறி, தற்போது புதிய பிறழ்வுகள் கண்டறியப்பட்டுள்ளன. இது இலங்கைக்கே உரிய பிறழ்வாகக் கூட இருக்கக்கூடுமென அஞ்சப்படுகின்றது. ஆகையால், மாற்றுக் கருத்துகளுக்கு இடமேயின்றி, மிகக் கவனமாக இருக்கவேண்டும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# தலிபான் ஆட்சி எவ்வாறு அமையும்?



எம்.எஸ்.எம். ஐயூப்

தலிபான் கிளர்ச்சிக் குழுவினர், திங்கட்கிழமை (17) முழு ஆப்கானிஸ்தானையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தூர பிரதேசங்களில், வேறு சில குழுக்கள் செயற்பட்டு வந்த போதிலும், அது, தலிபான்களின் நிர்வாகத்தை எவ்வகையிலும் இப்போதைக்குப் பாதிக்கப் போவதில்லை.

தலிபான்கள், இவ்வளவு விரைவாக முழு நாட்டையும் கைப்பற்றிக் கொள்வார்கள் என, அமெரிக்கத் தலைவர்கள் நினைக்கவில்லை போலும்! கடந்த புதன்கிழமை (11) ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருந்த கருத்துகளால் அது விளங்குகிறது.

அவர், ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது, "செப்டெம்பர் 11ஆம் திகதிக்கு முன்னர், அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறினாலும், வான் வழி உதவி வழங்கி, ஆப்கான் விமானப் படையினரை இயங்கக் கூடிய நிலையில் வைத்து, ஆப்கான் படையினருக்கு உணவு, உபகரணங்கள், அவர்களது சம்பளம் ஆகியவற்றை வழங்கி, எமது வாக்குறுதியை நிறைவேற்றுவதை நான் உறுதிப்படுத்துகிறேன்" எனக் கூறினார்.

அதேவேளை, அமெரிக்கப் படை வாபஸ் பெறுவதைப் பற்றி, வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் ஜென் பாஸ்கி குறிப்பிடும் போது, "அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தின் மூலம், ஆப்கான் பாதுகாப்புப் படையினருக்கு, 3.3 பில்லியன் டொலர் நிதி உதவி வழங்க, பைடன் ஆலோசனை வழங்கியுள்ளார்" எனத் தெரிவித்திருந்தார். ஆனால், இவை எதையும் செயற்படுத்த, அமெரிக்கத் தலைவர்களுக்கு அவகாசம் வழங்காமலேயே, தலிபான்கள் அசுர வேகத்தில் நாட்டைக் கைப்பற்றிவிட்டனர்.

இது, அமெரிக்க உளவுத்துறையின் பலவீனத்தை குறிக்கிறதா அல்லது, அமெரிக்கத் தலைவர்கள், தம்மோடு இணைந்து, கடந்த 20 ஆண்டுகளாகச் செயற்பட்டு வந்த ஆப்கான் தலைவர்களை, கடைசி நிமிடத்தில் ஏமாற்றினார்களா என்பது தெளிவாகவில்லை. எதுவானாலும், அமெரிக்கா வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம் இதுவாகும்.

அமெரிக்கப் படைகளுடன் இணைந்து செயற்பட்ட ஏனைய பலம் வாய்ந்த நாடுகளினது படைகளும் இவ்வனைத்துப் படைகளுக்கும் உதவியாகச் செயற்பட்ட ஆப்கானியர்களும், திங்கட்கிழமை (16) நாட்டைவிட்டு வெளியேற முண்டியடித்ததைப் பார்க்கும் போது, 1975ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் திகதி, தென் வியட்நாம் தலைநகர் சைகொன்னிலிருந்து, அமெரிக்கப் படைகள் அவசர அவசரமாக வெளியேறிய காட்சிகள் நினைவுக்கு வருகின்றன.

ஆனால், இரண்டும் முற்றிலும் சமமான நிலைமைகள் அல்ல. வியட்நாமிலிருந்து அமெரிக்க படையினர், வியட்நாம் புரட்சிவாதிகளால் விரட்டியடிக்கப்பட்டனர். அது, அமெரிக்கப் படைகளின் வரலாற்றில், அப்படைகள் அடைந்த மிகவும் மோசமான தோல்வியாகும்.

ஆனால், ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் விலகுவதென்பது, 2020ஆம் ஆண்டு, டிரம்ப் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முடிவாகும். அமெரிக்காவுக்குத் தேவையாக இருந்தால், 1991ஆம் ஆண்டைப் போலவே, விமான குண்டுத் தாக்குதல்களால், தலிபான்களின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தியிருக்கலாம்.

இப்போது, அமெரிக்காவுக்குத் தொடர்ந்தும் ஆப்கானிஸ்தான் தேவையில்லை. எனவே, இதுவரை தமக்கு உதவிய ஆப்கானியர்களை ஆபத்தில் தள்ளிவிட்டு, அமெரிக்கா வெளியேறுகிறது. அமெரிக்க உதவியால் பதவியில் இருந்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி, தமது குடும்பத்தினருடன் ஞாயிற்றுக்கிழமை (15) விமானம் மூலம், நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்.

அமெரிக்காவுக்கும் ஏனைய வெளிநாட்டுப் படைகளுக்கும், மொழி பெயர்ப்புப் பணி மூலம் உதவிய பலரும், ஏற்கெனவே வெளியேற்றப்பட்டனர். மேலும், அவ்வாறு உதவியோரும் தலிபான்களை விரும்பாதவர்களும் தலிபான்களால் தமக்கு ஆபத்து ஏற்படும் என்று பயந்தவர்களுமே, தலிபான்கள் தலைநகர் காபூலைக் கைப்பற்றியவுடன், நாட்டைவிட்டுத் தப்பி ஓடுவதற்காக, விமான நிலையத்துக்கு ஆயிரக் கணக்கில் முண்டியடித்துக் கொண்டு ஓடினர்.

2001ஆம் ஆண்டு, அமெரிக்காவில் உலக வர்த்தக நிலையமும் பாதுகாப்புத் தலைமையகமான பெண்டகனும் விமானங்களால் மோதித் தாக்கப்பட்டன; ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அல் கொய்தா என்ற பயங்கரவாத அமைப்பே, அந்தத் தாக்குதல்களை நடத்தியதாகப் பொதுவாகக் கருதப்படுகிறது.

அவ்வமைப்பின் தலைவராக இருந்த ஒஸாமா பின் - லேடன், ஆப்கானிஸ்தானில் இருப்பதாகக் குற்றம் சாட்டிய அமெரிக்கா, அவரைக் கையளிக்குமாறு, அப்போது ஆப்கானிஸ்தானை ஆட்சி புரிந்த தலிபான்களை வற்புறுத்தியது. அவர், தமது நாட்டில் இல்லை எனத் தலிபான்கள் கூறினர். ஆனால், அதை ஏற்காத அமெரிக்காவும் பிரிட்டனும், 2001ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், ஆப்கானிஸ்தான் மீது விமானத் தாக்குதல்களை மேற்கொண்டன. அத்தோடு, முன்னர் முஜாஹிதீன்கள் என்றும் வடக்குக் கூட்டணி என்றும் அழைக்கப்பட்ட பல்வேறு ஆப்கான் குழுக்களும், தலிபான் நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தின.

இதன் காரணமாக, ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர், ஐ.நாவின் அனுசரணையுடன் ஹமீத் கர்ஸாயின் ஆட்சி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், அமெரிக்காவினதும் ஏனைய வல்லரசுகளின் படைகளும் தொடர்ந்தும் அந்நாட்டில் நிலைகொண்டிருந்தன. இந்த நிலையில், கடந்த 20 ஆண்டுகளாகத் தலிபான்களுடன் ஆப்கான் அரச படைகளும் வெளிநாட்டுப் படைகளும் மோதல்களில் ஈடுபட்டு வந்தன.

இந்தக் காலகட்டத்தில், ஆப்கானிஸ்தான் போருக்காக, அமெரிக்கா ஒரு ட்ரில்லியன் (ஒரு இலட்சம் கோடி) டொலருக்கு மேல் பணத்தை செலவழித்துள்ளது. 300,000க்கும் மேற்பட்ட ஆப்கான் படை வீரர்களைப் பயிற்றுவித்துள்ளது.

தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ள நிலையில், அமெரிக்காவோ மேற்குலகமோ அந்த 20 ஆண்டு காலப் போரால், அடைந்த பயன் என்ன என்பதே இப்போது எழும் கேள்வியாகும். இந்த 20 ஆண்டு காலப் போர், ஆப்கானிஸ்தானில் சுமார் ஒரு இலட்சம் உயிர்களைக் குடித்துள்ளதுடன், வறுமையும் மட்டுமே, மேற்குலக நாடுகளின் ஆப்கான் மீதான ஆக்கிரமிப்பின் விளைவாகும்.

1979ஆம் ஆண்டு முதல், அதாவது 42 ஆண்டுகளாக, ஆப்கான் மக்கள் போர் சூழலிலேயே வாழ்கின்றனர். அந்த ஆண்டு, சோவியத் ஒன்றித்தின் படைகள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தன. ஆப்கான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே, தாம் அந்நாட்டுக்குப் படைகளை அனுப்பியதாக, சோவியத் ஒன்றியம் கூறியது. சோவியத் ஒன்றியத்தின் படைக்கு எதிராக, பல்வேறு ஆப்கான் குழுக்கள் போராடின. இக் குழுக்களுடன் ஆப்கான் போர் களத்தில் இறங்கியவரே, ஒஸாமா பின் லேடனும் ஆவார்.

முஜாஹிதீன்கள் என்றழைக்கப்பட்ட அந்தக் குழுக்களுக்கு, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் ஆயுதம், பணம், பயிற்சி வழங்கி வந்தன. பெரும்பாலும் இனம், கோத்திரம் போன்றவற்றின் அடைப்படையில் அமைந்த அக்குழுக்களுக்கு இடையேயும் போர்கள் இடம்பெற்றன. பல்லாயிரக் கணக்கான ஆப்கான்கள் இதனால் உயிரிழந்தனர்.

தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றி இருக்கும் நிலையில், இனி அவர்களது ஆட்சி எவ்வாறானதாக அமையும் என்பதே, அடுத்து எழும் கேள்வியாகும். அது, வெளிநாட்டு தலையீடு இல்லாமல், சுதந்திரமாக நடைபெறுமா என்பதும், முன்னர் போல் பெண்களுக்கு கல்வி உரிமை மறுக்கப்பட்டு, சிறுபான்மை இனத்தவர்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்கும் ஆட்சியாகவே அமையுமா எனப் பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

ஏனைய முஜாஹிதீன் குழுக்களுடன் இயங்கி வந்த தலிபான்கள், 1994 ஆம் ஆண்டே, தனியாக இயங்க ஆரம்பித்தனர். இரண்டு ஆண்டுகளில் அவர்கள் நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றினர். பாகிஸ்தானின் நிதி, இராணுவ உதவியாலேயே அவர்கள் இதைச் சாதித்தனர் எனக் கூறப்படுகிறது.

அதன் பின்னர் அவர்கள், கடந்த 20 ஆண்டுகளாக மேற்குலக நாடுகளின் அதி நவீன போர் ஆயுதங்களைக் கொண்ட படைகளுடன் மோதினர். ஒரு படையென்றால் அதற்கு ஆயுதங்கள், தாங்கிகள், வாகனங்கள், உணவு, உடை, மருந்து, பயிற்சி, வாழ்வாதாரச் செலவு போன்றவற்றுக்கு கோடிக் கணக்கான பணம் தேவைப்படுகிறது.

தலிபான்களுக்கு இந்தப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது? அவர்கள் அபின் வியாபாரத்தின் மூலமே இப்பணத்தைச் சம்பாதித்துக் கொள்கின்றனர் என மேற்கத்திய ஊடகங்கள் கூறுகின்றன. அது உண்மையாக இருந்தாலும், 20 ஆண்டு காலம் தாக்குப் பிடிக்க, அதனால் மட்டும் முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

அவர்கள், இஸ்லாமிய கடும்போக்காளர்கள் என்பதால், அபின் போன்ற போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட மாட்டார்கள் என்று சிலர் வாதிடுகின்றனர். அவ்வாறாயின், அவர்களுக்கு நிச்சயமாக வெளிநாடொன்று உதவியாக இருக்க வேண்டும். அவ்வாறாயின், வெளிநாட்டுத் தலையீடின்றி அவர்களுக்கு இனி ஆட்சியை நடத்த முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது.

அடுத்ததாக, அவர்களது ஆட்சி எவ்வாறானதாக அமையும் என்பதும் கேள்விக்கு உரியதாக உள்ளது. ஏனெனில், உலகில் எந்தவொரு முஸ்லிம் நாட்டிலும் இல்லாத ஓர் ஆட்சியையே, அவர்கள் 1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை நடத்தினர்.

பெண்களின் கல்வியைப் பற்றியே பலர் கவலை தெரிவிக்கின்றனர். அவர்களது சித்தாந்தங்களில் மாற்றம் ஏற்பட்டு உள்ளதாகவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு சில நாள்களுக்கு முன்னர், கத்தார் தலைநகர் தோஹாவில் அதற்குப் பதிலளித்த தலிபான் பேச்சாளர் சுஹைல் ஷஹீன், பெண்களின் கல்விக்குத் தடை விதிக்கப்பட மாட்டாது என்று தெரிவித்து இருந்தார்.

மத ரீதியான சிறுபான்மையினரது உரிமை, மற்றொரு கேள்வியாக உள்ளது. சிறுபான்மையினரான இலங்கை முஸ்லிம்களும் இதனை அறிய விரும்புவார்கள்.



## வாழ்வியல் தரிசனம்

வாழ்க்கையில் பல சவால்களை எதிர்நோக்கியேயாக வேண்டும். எல்லாக் காரியங்களுக்மே சுலபமாக நடக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஆனால், எந்த இடர் வந்தாலும் அதனை உடைத்தெறிவதற்குத் தயாராக இருக்கவேண்டும். எந்த இடர்வரினும் துணிவுடன் அதனை உடன் இல்லாதொழிப்பதும் சுவாரஷ்யமானது.

சோர்வை அகற்றுவதும் எதிலும் எதிர்மறை எண்ணங்களைத் தவிர்ப்பதும் சவால்களை உடைத்தெறிந்து வெற்றிகளை அடைவதற்கு ஏதுவாகின்றது. ஒருவரின் ஆளுமைகளை உணராமல் மோதுவதும் அவமானப்படுத்த எண்ணுவதும் ஆற்றாமை; துரோகத்தின் வெளிப்பாடு. ஆயினும் வல்லவர்கள், எதிர்ப்பின் மூலம் துணிவுடன் மென்மேலும் பலம் அடைக்கின்றார்கள்.

அரசியலில் சவால்களை எதிர்நோக்கியேயாக வேண்டும். எந்தச் சவால்களையும் பணபலம், ஆட்பலத்தின் மூலம் வெல்லப் பிரயத்தனம் எடுபார்கள். இது மிகவும் கோரமான அநீதி. வாழ்க்கையை அழகுடன் அமைக்க முடியும். அதற்கு நேர்மையே முக்கியமானது; எதிர்ப்புகளுக்கு அஞ்சேல்.

பருத்தியூர் பால-வயிரவநாதன்

## கடிதங்கள்

### மாங்குளத்தில் பஸ் நிலையத்தின் தேவை


மாங்குளத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள், இரவு வேளைகளிலும் தரித்து நின்று பணியில் ஈடுபடக் கூடிய பஸ் நிலையம் உருவாக வேண்டும் என, கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

வடமாகாண சபை இயங்கிய காலத்தில், மாங்குளம் நகரத்தில் பஸ் நிலையத்தை உருவாக்கி, இரவு வேளைகளிலும் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் தரித்து நின்று, மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களுக்கான பஸ் சேவைகளை நடத்தலாம் என்ற யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், துணுக்காய் ஆகிய கிராமங்களுக்கு கூடுதலான பஸ் சேவைகள் இடம்பெற வேண்டும் எனவும், தற்போது மாந்தை கிழக்குக்கான முதன்மை வீதிகள் புனரமைக்கப்படுவதன் காரணமாக, கடந்த பத்தாண்டுகளாக போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்ற இப்பகுதி மக்களுக்கும், மாங்குளத்தில் பஸ்கள் இரவு வேளைகளில் தரித்து நின்று, அதிகாலையில் பணியில் ஈடுபடக் கூடிய வகையில் பஸ் நிலையம் அமைய வேண்டும்.

தற்போது முல்லைத்தீவு நகரில் இருந்துதான் கிராமங்களுக்கான பஸ் சேவைகள் நடைபெறுகின்றன. இவை தாமதமாகவே இடம் பெறுவதன் காரணமாக, பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள் நேரத்துடன் தமது இடங்களுக்குச் செல்ல முடியாத அவலம் காணப்படுகின்றது. இந்நிலையில் மாங்குளத்தில் பஸ் நிலையம் அமைந்தால் பெரும் பயன்கள் உருவாகும் என்பதே பொது அமைப்புகளின் கோரிக்கையாகும்.

நடராஜா கிருஷ்ணகுமார்




# கொவிட்-19 சட்டமூலம் மக்களுக்கானது



கொரோனா வைரஸ் பரவலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிச் சேவையின் சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கே கொவிட் - 19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் பொதுமக்களுக்காகவே கொண்டுவரப்பட்டுள்ளது என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

கொவிட் - 19 தற்காலிக ஏற்பாடுகள் தொடர்பிலான திருத்தச்சட்டமூலம் மீதான விவாதத்தில் நேற்று (17) கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், நீதிமன்ற தலையீடுகளில் உள்ள வழக்குகளை வேறு நீதிமன்றம் ஒன்றுக்கு எவ்வாறு பெற்றுக்கொடுப்பது, கொவிட் காலத்தில் நீதிமன்றங்களை இணையத்தளத்தில் எவ்வாறு நடத்தி செல்லுதல், சில உடன்படிக்கைகளை சட்ட ரீதியாக செய்து கொள்ள முடியாது போகும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு மேலதிக காலத்தை எவ்வாறு பெற்றுக்கொடுப்பது உள்ளிட்ட பிரதான 4 காரணங்களுக்காகவே இச்சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## ஜனாதிபதிக்கே பவித்ராவின் கதை



ஜனாதிபதியுடன் இருப்பவர்கள் பலிகடாவாகப் போகிறார்கள் என்பதையே அமைச்சர் பவித்ரா மறைமுகமாக, கதையாகக் கூறியதாகத் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொவிட் - 19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான நேற்றைய (17) பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், சுகாதார அமைச்சராக இருந்த பவித்ரா வன்னியாராச்சி, அந்த அமைச்சிலிருந்து விடைபெறும்போது அரசர் ஒருவரினதும், புரோகிதர் ஒருவரினதும் கதை ஒன்றை கூறியிருந்தார். அந்தக் கதையை ஜனாதிபதிக்காகவே பவித்ரா கூறியிருந்தார். ஜனாதிபதியுடன் இருப்பவர்கள் பலிகடாவாகுவார்கள் என்பதே அந்த கதையின் அர்த்தம் என்றார்.

### நிபுணர்களின் கருத்துகளை கவனத்தில் கொள்க;

## சர்வகட்சித் தலைவர் கூட்டத்தையும் கூட்டுக

கொரோனா வைரஸ் நிலைமைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கமும், எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென தெரிவிக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்.பி, உடனடியாக சர்வகட்சி தலைவர்கள் கூட்டமொன்றை கூட்ட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான பாராளுமன்ற விவாதத்தில் நேற்று (17) கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கொரோனா வைரஸ் நிலைமைகளால் ஆட்சியாளர்கள் எதிர்பாராத பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள். நாட்டின் சுகாதாரத் துறை தொற்று நோய் தொடர்பில் அனுபவம் மிக்கது. அமெரிக்காவும் கொரோனா வைரஸால் பாதிப்பிலிருந்து எவ்வாறு மீள்வது என்கிற நெருக்கடியில் இருக்கிறது. எனவே இந்த நேரத்தில் மரண வீதம் அதிகரிப்பது தொடர்பில் அனைவரும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். இந்த நேரத்தில் தவறுகளை தேடுவதை தவிர்த்து, பிரச்சினைகளை தீர்க்கவே நடவடிக்கையெடுக்க வேண்டும். இந்த நேரத்தில் விசேட நிபுணர்களின் கணிப்புகளை கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## இந்தியாவை விட ஆபத்தான நிலையில் இலங்கை



உலகில் பிரபலமான பல்கலைக்கழகமொன்றால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு அமைய இந்தியாவை விட 15 மடங்கு வேகமாக அதிக ஆபத்தை இலங்கை எதிர்கொண்டு வருவதாக அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொவிட்-19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், நாளாந்த கொரோனா வைரஸ் மரண வீதத்தில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருப்பதாகவும், வாராந்த கொரோனா வைரஸ் மரணத்தில் இலங்கை 4ஆவது இடத்தில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மரண எண்ணிக்கையின் அடிப்படையில் இலங்கை ஆபத்தான நிலையில் இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

### நிதி சட்டமூலம்:

## சில சரத்துக்குள் முரணானவை

உயர்நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிதி சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் தனக்குக் கிடைத்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (17) அமர்வை ஆரம்பித்து வைத்து, சபாநாயகர் அறிவிப்பை விடுக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### தொடர் போராட்டமே

## தலிபான்களின் வெற்றிக்குக் காரணம்

தலிபான்களின் தொடர் போராட்டமே அவர்களின் வெற்றிக்குக் காரணமெனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன், எத்தனையோ சுதந்திர இயக்கங்களுக்கும், சுதந்திரத்துக்காகப் போராடும் இனங்களுக்கும் தலிபான்களின் விடுதலை மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்றைய (17) பாராளுமன்ற விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கிளிநொச்சியல் உள்ள அனைத்து வைத்தியசாலைகளும் கொரேனாா வைரஸ் தொற்றால் நிரம்பி வழிகிறது. முல்லைதீவு, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணத்திலும் இதே நிலையே காணப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

## உண்மை கூற முயன்றதால் பதவியை இழந்தார் பவித்ரா



நாட்டின் சுகாதார நிலைமைகளின் உண்மை தன்மைகளை கூற முயற்சித்தமையாலேயே சுகாதார அமைச்சு பவித்ரா வன்னியாராச்சி இடமிருந்து பறித்து கெஹலியவுக்கு வழங்கப்பட்டதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நேற்று (17) பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர், கொரோனா வைரஸ் தொற்று பரவுவதற்கு நாட்டில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களே காரணமென அரசாங்கம் கூறுகிறது. நிதி அமைச்சராக பசில் பதவியேற்கும்போது சந்திக்கு சந்தி மக்கள் ஒன்றுகூடி அதனைக் கொண்டாடினார்கள். அதேபோல நாவலபிட்டியிலும் ஆளுங்கட்சியினர் பேரணிகளை முன்னெடுத்தனர். அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகளால் நாட்டில் கொரோனா பரவாதா எனவும் கேள்வி எழுப்பிய அவர், கொரோனா வைரஸ் பரவலுக்கு போராட்டங்கள் காரணமென கூற வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

### விவசாயிகளின் பிரச்சினை

## ஐ.நா சபை அலுவலகம் முன்பாக போராட்டம்

புதுடெல்லி

விவசாயிகளின் பிரச்சினையில் சர்வதேச நாடுகள் தலையிட வேண்டுமென தமிழகத்தின் காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கத்தினர், டெல்லி ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் முன்பாக போராட்டம் நடத்தினர்.



மத்திய அரசாங்கத்தின் முக்கிய மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து விவசாயிகள் டெல்லியில் போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்களுக்கு ஆதரவாக பல்வேறு மாநிலங்களிலிருந்து விவசாய சங்கத்தினர் வந்து கலந்து கொண்டு ஆதரவளித்து வருகின்றனர். இந்தவகையில், கடந்த வாரம், தமிழகத்திலிருந்து காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கத்தினர் டெல்லி வந்திருந்தனர்.

காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கத்தினரை டெல்லி ரயில் நிலையத்திலேயே பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அனைவரையும் வாகனத்தில் ஏற்றி டெல்லியின் எல்லையில் விவசாயிகளின் போராட்டக் களமாகி விட்ட சிங்கூரில் இறக்கி விட்டனர். இங்கிருந்தபடி போராடிய தமிழக விவசாயிகள் திடீர் என டெல்லியின் லோதி எஸ்டேட் பகுதிக்கு வந்தனர். அங்குள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தகவல் மையத்துக்கு முன்பாக கூடிநின்று கோஷமிட்டபடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

### தேர்தலில் போட்டியிடுவோர்

## கட்டாயம் பசு வளர்க்க வேண்டும்

போபால்




'தேர்தலில் போட்டியிட விரும்புவோருக்கு, பசு வளர்ப்பதை கட்டாயமாக்க வேண்டும்' என, மத்திய பிரதேச அமைச்சர் ஹர்தீப் சிங் டாங் கோரிக்கை வைத்துள்ளார்.

சமூகத்தின் அனைத்து பிரிவினரும் பசுக்களை பாதுகாக்க தங்களால் முடிந்த முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், பசுக்களை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்றார்.

### சட்டைப் பைகளில்

## ஜெயலலிதாவின் படத்துக்கு பதிலாக இ.பி.எஸின் படம்

சென்னை



ஜெயலலிதா இருந்தவரை, அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினரின் சட்டைப் பைகளில் ஜெயலலிதா படம் இடம் பெற்றிருந்தது. ஜெயலலிதா மறைந்த பின்பும் அவரது படத்தை வைத்து இருந்தனர். தற்போது நிலைமை மாறி உள்ளது.

அ.தி.மு.கவில் இரட்டை தலைமை இருந்தாலும் இ.பி. எஸ் கையே ஓங்கியுள்ளது. ஜெயலலிதாவுக்கு விசுவாசம் காட்டியது போல, இ.பி. எஸ் க்கு விசுவாசம் காட்ட ஆரம்பித்துள்ளனர். சேலம் மாவட்டம் சங்ககிரி தொகுதி எம்.எல்.ஏ சுந்தரராஜன், சட்ட சபைக்கு வந்த போது, அவரது சட்டை பையில் ஜெயலலிதா படத்துக்குப் பதிலாக, இ.பி. எஸ் படம் வைத்திருந்தார். சட்டையில் இ.பி.எஸ் படம் பொறித்த 'இலட்சினை' ஒன்றையும் அணிந்திருந்தார். ஜெயலலிதா மறைந்த ஒரிரு ஆண்டுகளிலேயே, எம். எல்.ஏக்கள் அவரை மறந்து, தற்போதைய தலைமைக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்திருப்பது, கட்சியினரிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

### சசிகலா மீதான முறைகேடு;

## குற்றப்பத்திரிக்கைக்கு உத்தரவு

பெங்களூர்



சசிகலா மீதான சிறை முறைகேடு வழக்கில், குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய கர்நாடக உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் தண்டிக்கப்பட்ட சசிகலா, பெங்களூர் அக்ரஹாரா சிறையில் 4 ஆண்டுகள் அடைக்கப்பட்டு இருந்தார். அவரது தண்டனை காலம் நிறைவு பெற்றதை தொடர்ந்து கடந்த ஜனவரியில் சசிகலா விடுதலை ஆனார். சசிகலா சிறையில் இருந்தபோது சிறப்பு சலுகை பெற்றதாக அப்போதைய சிறைத் துறை டிஐஜி ரூபா புகார் தெரிவித்தார்.

## சிவசங்கர் பாபாவின் மனுக்கள் தள்ளுபடி

சென்னை



மாணவிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாகக் கைது செய்யப்பட்ட சிவசங்கர் பாபாவின் இரண்டு பிணை மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

சிவசங்கர் பாபா பாலியல் தொல்லை கொடுத்ததாக, முன்னாள் மாணவிகள் அளித்த புகாரில், அவர் மீது போக்சோ சட்டத்தில் மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்ட பின்னர், தலைமறைவான சிவசங்கர் பாபாவை சிபிசிஐடி பொலிஸார் ஜூன் 16ஆம் திகதி டெல்லியில் கைது செய்து, செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்துள்ளனர்.

ஏற்கெனவே அவரது இரண்டு பிணை மனுக்கள் செங்கல்பட்டு போக்சோ நீதிமன்றம் மற்றும் மாவட்ட முதன்மை நீதிமன்றம் ஆகியவற்றில் தள்ளுபடி செய்யப்பட்டன.

### சோனியாவின் கட்டுரையில்

## அமைதியாக இருப்பது பெரிய பாவம்

புதுடெல்லி



அரசியலமைப்பு சட்டம், மக்களுக்கு அளித்துள்ள அடிப்படை உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும்போது, அமைதியாக இருப்பது மிகப் பெரிய பாவம் என, காங்கிரஸ் தலைவர் சோனியா குறிப்பிட்டுள்ளார்.

75ஆவது சுதந்திர தினத்தையொட்டி நாளிதழ் ஒன்றில், காங்கிரஸ் தலைவர் சோனியா கட்டுரை எழுதியுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது: நம் நாட்டில் ஊடக சுதந்திரம் மறுக்கப்படுகிறது. எழுத்தாளர்கள், சிந்தனையாளர்களுக்கு கருத்து சுதந்திரம் இல்லை. பாராளுமன்றத்தில் பேச உறுப்பினர்களுக்கு சுதந்திரம் இல்லை. ஒட்சிசன் தட்டுப்பாடு, ஜி.எஸ்.டி போன்றவை குறித்து கருத்து தெரிவிக்க மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தங்கள் உரிமைகளைக் கேட்டு பெற மாநில அரசாங்கங்களால் முடியவில்லை. இப்படிப்பட்ட நிலையில் சுதந்திரம் என்றால் என்ன என்பது குறித்து மக்கள் சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டிய நேரம் இது.

பல ஆண்டுகளாக நாம் அரும்பாடுபட்டு உருவாக்கிய வளர்ச்சிகள், வெற்று வாக்குறுதிகள், வீண் விளம்பரங்களால், மீண்டும் பழைய நிலையை எட்டி உள்ளன. நம் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை சரி செய்வோம் என, 75வது சுதந்திர தினத்தில் உறுதி ஏற்போம். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தி.மு.கவுடன் கூட்டணி அமைக்க தே.மு.தி.க தயார்

சென்னை



தமிழகத்தில் நடக்கவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் தி.மு. கவுடன் கூட்டணி அமைக்க தேசிய முன்னேற்ற திராவிட கழகம் தயாராகி வருகிறது. சுமார் 8 சதவீத இடங்களைக் கேட்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலின்போது, கடைசி நேரத்தில் அ.தி.மு.க கூட்டணியில் இருந்து தே.மு. தி.க விலகியது. பின்னர், அ.ம.மு. கவுடன் கூட்டணி அமைத்து 60 தொகுதிகளில் போட்டியிட்டது. விருத்தாசலத்தில் தே.மு. தி.க பொருளாளர் பிரேமலதா போட்டியிட்டார். ஆனால், ஒரு தொகுதியில்கூட தே.மு.தி.க வெற்றி பெறவில்லை.

உடல்நலக் குறைவு காரணமாக இத்தேர்தலில் விஜயகாந்த் போட்டியிடவில்லை. ஆனாலும், தே.மு.தி.க வேட்பாளர்களை ஆதரித்து அவர் பிரசாரம் மேற்கொண்டார்.

தொடர்ந்து மருத்துவ சிகிச்சை எடுத்து வந்த அவர், தற்போது வீட்டிலேயே ஓய்வில் உள்ளார். உள்ளூராட்சி தேர்தலுக்கான பணிகளை தொடங்கி, தேர்தலுக்கு தே.மு.தி.கவினர் தயாராக வேண்டும் என்று அறிவுறுத்தி வருகிறார்.

LK Newspapers Viber Community

ஆப்கானிஸ்தான்

காபூல் விமான நிலையத்துக்கு மக்கள் படையெடுப்பு

# கொடூரமான போர் காலப் பதிவுகள்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் விமான நிலையத்தை, அந்நாட்டிலிருந்து வெளியேறத் துடிக்கும் ஆயிரக்கணக்கானோர் நேற்று முன்தினம் படை எடுத்திருந்தனர்.

காபூலை தலிபான்கள் கைப்பற்றியதையடுத்தே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய கொரோனா பரவல் காலத்தின் பேரவல சாட்சியாக, ஐக்கிய அமெரிக்காவின் இராணுவப் போக்குவரத்து விமானத்தைச் சுற்றி நூற்றுக்கணக்கானவர்கள் ஓடி வந்ததுடன், பலர் இறக்கைகள் மற்றும் விமானத்தில் பிடிக்கக் கூடிய



இடங்களில் பிடித்தவாறு காணப்பட்டிருந்தனர்.

தவிர, விமானம் மேலெழுந்த பின்னர் இருவர் கீழே வீழ்ந்து உயிரிழந்தமையானது அண்மைய காலத்தின் கொடூரமான போர்க்காலப் பதிவாகக் காணப்படுகின்றது.

இதேவேளை, அவ்விமானமானது தரையிறங்கும் பகுதியை

> சனத்திரளை கலைக்க மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் என்பவற்றில் எழுவர் உயிரிழந்திருந்தனர்

இயக்க முடியாமல் வேறொரு நாட்டில் தரையிறங்கும்போது அப்பகுதியில் மனிதச் சிதிலங்கள் காணப்பட்டுள்ளன.

இச்சம்பவங்கள், நெருக்கடி, சனத்திரளை கலைக்க மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் என்பவற்றில் எழுவர் உயிரிழந்திருந்தனர்.

இச்சம்பவங்களையடுத்து விமானங்கள் புறப்படுவது இடைநிறுத்தப்பட்டு பின்னர் தாமதமாக ஆரம்பித்திருந்தன.

ஐ. அமெரிக்கா

ஆப்கானிலிருந்து வெளியேறியமையை

# நியாயப்படுத்தும் பைடன்



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நிலையில், அது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்து விளக்கம் அளித்துள்ளார்.

இதன்போது அவர் தெரிவித்துள்ளதாவது, "2001ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற இரட்டைக் கோபுரத் தாக்குதல் காரணமாக பயங்கரவாதிகளை ஒழிப்பதற்காகவே அமெரிக்க படைகள், ஆப்கானிஸ்தான் சென்றன.

"ஆப்கானிஸ்தான் நாட்டைக் கட்டமைப்பதற்காக அங்கு செல்லவில்லை. அமெரிக்காவுக்கு எதிராக ஆப்கானிஸ்தானில் இருந்து செயல்பட்டு வந்த தீவிரவாதம் ஒடுக்கப்பட்டுள்ளதால், அமெரிக்க இராணுவம் வெளியேற முடிவு செய்தது. அமெரிக்க இராணுவம் வெளியேறுவதற்கு இதை விட உகந்த சூழல் இருக்காது.

"தலிபான்களை ஒடுக்க ஆப்கான் இராணுவத்துக்கு அனைத்து உதவிகளையும் அமெரிக்கா செய்தது. ஆனால், ஆப்கான் இராணுவத்தினர் போராடாமலேயே சரணடைந்து விட்டனர். ஆப்கான் அரசியல் தலைவர்களிடம் ஒற்றுமை இன்மையே தலிபான்களின் வெற்றிக்கு முக்கிய காரணம்.

"ஆப்கான் அரசியல்வாதிகள் நாட்டைக் கைவிட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். ஆப்கான் இராணுவமே போராடத் தயாராக இல்லாத சூழலில், அமெரிக்க வீரர்கள் போரிடுவதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்" எனத் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது டெஸ்டில்

# இங்கிலாந்தை தோற்கடித்த இந்தியா



இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இந்தியா வென்றுள்ளது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் தொடரில், லோர்ட்ஸில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த குறித்த போட்டியில் 151 ஓட்டங்களால் இந்தியா வென்றது.

நேற்று முன்தின ஐந்தாம் நாளை, தமது இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இந்தியா, ஆரம்பத்திலேயே றிஷப் பண்ட், இஷாந்த் ஷர்மாவை ஒலி றொபின்ஸனிடம் இழந்தது.

எனினும், அடுத்து ஜோடி சேர்ந்த மொஹமட் ஷமியின் ஆட்டமிழக்காத 56, ஜஸ்பிரிட் பும்ராவின் ஆட்டமிழக்காத 34 ஓட்டங்களோடு, தமது இரண்டாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுகளை இழந்து 298 ஓட்டங்களைப் பெற்ற இந்தியா தமது இனிங்ஸை இடைநிறுத்தியது.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஆரம்பத்திலேயே றோறி பேர்ண்ஸ், டொம் சிப்லியை முறையே பும்ரா, ஷமியிடம் இழந்தது. இதையடுயடுத்து இணைந்த ஹசீம் ஹமீட், அணித்தலைவர் ஜோ றூட் ஆகியோர் ஓரளவுக்குத் தடுப்பை வழங்கியபோதும், ஹமீட் இஷாந்த் ஷர்மாவிடம் வீழ்ந்தார்.

பின்னர் வந்த ஜொனி பெயார்ஸ்டோவும் ஷர்மாவிடம் விழ, உடனேயே றூட்டும் பும்ராவிடம் வீழ்ந்தார். இதையடுத்து சேர்ந்த ஜொஸ் பட்லரும், மொயின் அலியும் சிறிது நேரம் தடுத்தாடியபோதும், அலி, சாம் கர்ரன் ஆகியோர் அடுத்தடுத்த பந்துகளில் மொஹமட் சிராஜ்ஜிடம் வீழ்ந்தனர்.

இதையடுத்து பட்லருடன் இணைந்த றொபின்ஸன் நிதானமாக இருந்தபோதும் குறிப்பிட்ட நேரத்தில் பும்ராவிடம் வீழ்ந்தார். தொடர்ந்து பட்லர், ஜேம்ஸ் அண்டர்சன் ஆகியோர் அடுத்துதடுத்து சிராஜ்ஜிடம் விழ, சகல விக்கெட்டுகளையும் இழந்து 120 ஓட்டங்களையே பெற்ற இங்கிலாந்து தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக லோகேஷ் ராகுல் தெரிவானார்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இந்தியா: 364/10 (துடுப்பாட்டம்: லோகேஷ் ராகுல் 129, றோஹித் ஷர்மா 83

பந்துவீச்சு: ஜேம்ஸ் அண்டர்சன் 5/62

இங்கிலாந்து: 391/10 (துடுப்பாட்டம்: ஜோ றூட் ஆ.இ 180, ஜொனி பெயார்ஸ்டோ 57. பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 4/94, இஷாந்த் ஷர்மா 3/69, மொஹமட் ஷமி 2/95)

இந்தியா: 298/8 (துடுப்பாட்டம்: அஜின்கியா ரஹானே 61, மொஹமட் ஷமி ஆ.இ 56, ஜஸ்பிரிட் பும்ரா ஆ.இ 34, றிஷப் பண்ட் 22, றோஹித் ஷர்மா 21, விராத் கோலி 20 . பந்துவீச்சு: மார்க் வூட் 3/51, ஒலி றொபின்ஸன் 2/45, மொயின் அலி 2/84, சாம் கர்ரன் 1/42)

இங்கிலாந்து: 120/10

பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 4/32, ஜஸ்பிரிட் பும்ரா 3/33, இஷாந்த் ஷர்மா 2/13, மொஹமட் ஷமி 1/13

போட்டியின் நாயகன்: லோகேஷ் ராகுல்

துருக்கி

வெள்ளத்தால்

# உயிரிழந்தோர் தொகை 77ஆக உயர்வு

## 47 பேரைக் காணவில்லை



துருக்கியின் கருங்கடல் மாகாணங்களிலுள்ள சில நகரங்களை கடந்த வாரம் தாக்கிய திடீர் வெள்ளத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 77ஆக உயர்ந்துள்ளதாக அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், காணாமல்போன 47 பேரை அவசரநிலை பணியாளர் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

இதேவேளை, வானிலை எதிர்வுகூறல்களின்படி மேலும் வெள்ளத்தை குறித்த பிராந்தியம் சந்திக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.



# பிரட் புயல்..

ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடாவை பிரட் புயல் நேற்று முன்தினம் பிற்பகலில் தாக்கியுள்ளது.

டயலொக் அழைப்புத் தொடர்:

# நீலத்தை வென்ற சாம்பல்




டயலொக் இலங்கை கிரிக்கெட் சபை அழைப்பு இருபதுக்கு - 20 தொடரில், பல்லேகலவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இலங்கை கிரிக்கெட் சபையின் நீல அணியுடனான போட்டியில் இலங்கை கிரிக்கெட் சபையின் சாம்பல் அணி வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சாம்பல்

சாம்பல்: 167/4 (20 ஓவ. )
(துடுப்பாட்டம்: லஹிரு மதுஷங்க ஆ.இ 74 (39), சரித் அஸலங்க 54 (47) ஓட்டங்கள். பந்துவீச்சு: தனஞ்சய டி சில்வா 1/27 (4), மஹீஷ் தீக்‌ஷன 1/23 (3), டில்ஷான் மதுஷங்க 1/16 (2))

நீலம்: 151/7 (20 ஓவ. )
(துடுப்பாட்டம்: சதீர சமரவிக்கிரம 58 (42), அஷேன் பண்டார 29 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: நுவான் பிரதீப் 2/22 (4), தசுன் ஷானக 2/24 (4), சத்துரங்க டி சில்வா 1/28 (4))

இதேவேளை, முன்னதாக இலங்கை கிரிக்கெட் சபையின் பச்சை அணியை 10 விக்கெட்டுகளால் இலங்கை கிரிக்கெட் சபையின் சிவப்பு அணி வென்றிருந்தது.

# சிற்றிக்கு செல்வாரா கேன்?

இங்கிலாந்து பிரீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முன்களவீரரான ஹரி கேனைக் கைச்சாத்திடுவதற்கான இன்னொரு பிரீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் கோரிக்கைகளை தொடர்ந்தும் டொட்டென்ஹாம் நிராகரித்து வரும் நிலையிலும் அதை சிற்றி தொடருகின்றது.

வீரர்களை பரிமாறுவதற்கான காலக்கெடுவானது இம்மாதம் 31ஆம் திகதி முடிவடைகையில், இரண்டு வாரங்களுக்கிடையில் ஒப்பந்தத்தை சிற்றி பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

டொட்டென்ஹாமுடன் மூன்றாண்டுகளுக்கும் மேற்பட்ட ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கின்ற கேனை 150 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களுக்கு டொட்டென்ஹாம் மதிப்பிட்ட நிலையில், 120 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்கள் வரையிலேயே அதிகபட்சமாக சிற்றி வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



நியூசிலாந்து

# ஒரு தொற்றால் முழு நாடும் முடக்கம்




ஒரு புதிய கொவிட் -19 இனங்காணப்பட்டதை அடுத்து, நாடு தழுவிய முழுமையான பூட்டுதலை நியூசிலாந்தின் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன், நேற்று அறிவித்தார்.

ஆறு மாதங்களில் இந்தப் புதிய முதலாவது கொரோனா வைரஸ் தொற்றாளர், நியூசிலாந்தின் பெரிய நகரமான ஒக்லண்டில் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்தே குறித்த முடக்கம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இன்றிலிருந்து குறைந்தது மூன்று நாள்களுக்கு நான்காம் கட்ட முடக்கத்துக்குள் நியூசிலாந்து செல்கின்றதுடன், ஒக்லண்ட் மற்றும் கொறொமன்டெல் ஆகியவை ஏழு நாள்கள் முடக்கத்துக்குள் இருக்கப் போகின்றன.

பாடசாலைகள், அலுவலகங்கள், வியாபாரங்கள் மூடப்படப்போவதுடன், அத்தியாவசிய சேவைகள் மாத்திரம் இயங்கவுள்ளன.

# புத்தளம் லீக்கின் யாப்பு அங்கிகரிக்கப்பட்டது

■ எம்.யூ.எம். சனூன்



புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் திருத்தப்பட்ட சட்ட யாப்பானது, லீக்கின் சிறப்புப் பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

இக்கூட்டமானது, புத்தளம் லீக்கின் தலைவரும், புத்தளம் நகர சபைத் தலைவருமான எம்.எஸ்.எம். ரபீக் தலைமையில் நகர சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போதே இந்த யாப்பு திருத்தங்களுடன் அங்கிகரிக்கப்பட்டது.

1964ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் சட்ட யாப்பானது கடந்த 1972ஆம் ஆண்டி உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

LK News Viber Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 18 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.